விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 19 திங்கட்கிழமை (03.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 196

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# நாட்டில் வன்முறைகள் ஏற்படுவதற்கு ஜனாதிபதி மகிந்தவே முழுக்காரணம்


## அன்ரன் பாலசிங்கம் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

இலங்கையில் தற்போதைய வன்முறை மிகுந்த சூழ்நிலை ஏற்படுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே முழுக்காரணமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியாவில் இருந்து ஒளிபரப்பாகும் என்.டி.ரிவிக்கு அன்ரன் பாலசிங்கம் வழங்கிய நேர்காணலின் பிறிதொரு பகுதியை அந்தத் தொலைக்காட்சி நேற்று வெளியிட்டுள்ளது. அதிலேயே இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)



## அரசியல் யாப்புத்திருத்தத்திற்கு ஐ.தே.கவுடன் மகிந்த உடன்பாடு

இலங்கை அரசியல் யாப்பில் 18 ஆவது திருத்தம் மேற்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சியுடன் மகிந்த அரசாங்கம் உடன்பாடு செய்துள்ளது.

9 மாகாணங்களில் ஐந்து மேல் முறையீட்டு மாகாணங்களை அமைக்க இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான சட்ட முன்வடிவு எதிர்வரும் வியாழக்கிழமை நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது.ஐக்கிய தேசியக்கட்சியின் கொறடா யோசப் மைக்கல் பெரேரா கூறுகையில், அரசாங்கத்தின் இந்தத்திருத்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்குமென்றார்.

மேல் முறையீட்டு நீதி மன்றக்கிளைகள் அமைக்கப்படும் நிலையில் மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையும் 11 இல் இருந்து 21 ஆக உயர்த்தப்படும் என தெரிவித்தார். (க)

## மணலாறில் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு,மணலாறு கொக்குத்தொடுவாயில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இரண்டு இராணுவச்சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய் பகுதியில் உள்ள முன்னரங்க நிலைகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரையான நேரத்தில் இடம்பெற்றதாகவும் மூன்று தடவைகள் இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகவும் இராணுவத் தரப்புத் தகவல் தெரிவித்துள்ளது. (ச–5)

## யாழில் இராணுவத்தினர் மீது பரவலாகத் தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர் மீது நேற்றும் நேற்று முன்தினமும் பரவலாக தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கோண்டாவில் பகுதியில் இராணுவக் காவலரண் மீது அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய கைக்குண்டுத்தாக்குதலில் இராணுவத்தரப்பைச்சேர்ந்த ஒருவர் பலியானதாக தெரிவிக்கப்பட்டது.இச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இதேவேளை வடமராட்சி வல்வெட்டித்துறையில் இராணுவக் காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்கள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.இது இவ்வாறிருக்க வடமராட்சி வியாபாரிமூலையில் நேற்று முன்தினம் இரவு 7.50 மணியளவில் இராணுவக்காவலரண் மீது அடையாளம் தெரியாத நபர்களால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கைதடியில் இராணுவத்தினர் மீது மோட்டார் சைக்கிளில் சென்ற அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச்சூட்டினை நடத்தியுள்ளனர். இச் சம்பவத்திலும் எவ ருக்கும் எந்தப்பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது (ச–5)

## சிங்கள இளம் ஊடகவியலாளர் தெகிவளையில் சுட்டுக்கொலை



(கொழும்பு)

'சத்தின' சிங்கள நாளேட்டின் முன் னாள் பாதுகாப்புத்துறை தொடர்பான பத்தி எழுத்தாளரும் ஊடகவியலாளருமான லக்மல் சம்பத் (வயது 23) சூட்டுக்காயங்களுடன் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அவருக்கு வந்த தொலைபேசி அழைப்பின் பேரில் வெளியே சென்றவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிங்கள ஊடக உலகின் பிரபல எழுத்தாளரான சம்பத் இராணுவ புலனாய்வுத்துறையில் இடம்பெற்று வரும் ஊழல்கள் பற்றியும் இராணுவக்கட்டமைப்பின் பல்வேறு மட்டங்களில் நடைபெறும் லஞ்ச முறைகேடுகள் பற்றியும், பாதாள உலகக்கும்பல்களுடன் அவற்றுக்குமுள்ள (10 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி, கல்வியங்காட்டில் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியின் சில பகுதிகள் நேற்று அதிகாலை முதல் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. வதிரிச் சந்தி ,அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடி ,மாலுசந்தி,உதய கதிர்காமம், நெல்லியடிச்சந்தி ஆகிய் பகுதிகளே சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

வீதிகளெங்கும் பெருமளவு இராணுவத் தினர் குவிக்கப்பட்டு அதிகாலை 5 மணி முதல் இத் தேடுதல் நடைபெற்றது. இதன் போது உதயகதிர்காமம் ஊடாக ஞாயிற்றுக் கிழமை வழிபாடுகளுக்காக வல்லிபுரக் கோவி லுக்குச் சென்ற பக்தர்களும் அனுமதிக்கப் படாது திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கல்வியங்காடு இராமலிங்கம் வீதி,ஆடிய பாதம் வீதி,சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதிப்பகுதிகளும் நேற்று அதிகாலை 5 மணி முதல் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடைபெற்றது. வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அன்ரன் பாலசிங்கத்தின் கோரிக்கையை இந்திய அரசு நிராகரிக்க வேண்டுமாம்!

## இப்படிக் கூறுகிறார் நாராயணசாமி எம்.பி

(புதுச்சேரி)

ராஜிவ்காந்தியைக் கொலை செய்த விடுதலைப் புலிகளை மன்னித்து, இலங்கை பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்ற அன்ரன் பாலசிங்கத்தின் கோரிக்கையை இந்திய அரசு நிராகரிக்க வேண்டும் என நாராயணசாமி எம்.பி.கோரிக்கை விடுத்துள்ளார்.

ராஜிவ்காந்தியைக் கொன்றது விடுதலைப் புலிகள் தான் எனவும் அதற்குத் தாங்கள் வருத்தம் தெரிவிப்பதாகவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் கூறியுள்ளார்.

இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜிவ்காந்தி இலங்கையில் உள்ள தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் இந்திய அமைதிப் படையை அனுப்பி வைத்து உதவினார். இந்திய நாட்டை விஞ்ஞான மையமாக மாற்றுவதற்கு கனவு கண்ட ராஜிவ்காந்தியை விடுதலைப் புலிகள் படுகொலை செய்தது இந்தியாவின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியது.

ராஜிவ்காந்தி கொலை சம்பவத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் முதல் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டு அவரைக் கைது செய்ய இந்திய அரசு இலங்கை அரசுக்கு கடிதம் எழுதி யுள்ளது. மற்ற குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் ராஜிவ்காந்தி படுகொலைக்கு வருத்தம் தெரிவிப்பதும் இந்திய அரசு மீண்டும் இலங்கை பிரச்சினையில் தலையிட வேண்டும் என கோருவதும் விந்தையாகவுள்ளது.

மன்னிக்கமுடியாத குற்றம் செய்துள்ள விடுதலைப்புலிகள் மன்னிப்பு கேட்கவே அருகதை அற்றவர்கள். இலங்கை தமிழர்களுக்கு இந்தியாவில் பரிவு உண்டு. ஆனால்விடுதலைப் புலிகளுக்கு அல்ல. எனவே த ராஜிவ்காந்தியைக் கொலைசெய்த விடுதலைப் புலிகளை மன்னிக்க வேண்டும். இலங்கை பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்ற அன்ரன் பாலசிங்கத்தின் கோரிக்கையை இந்திய அரசு நிராகரிக்க வேண்டும் என்றார். (கு)

# பாலசிங்கத்தின் கருத்து தெளிவில்லாமலிருக்கிறது

## என்கிறார் முதல்வர் கருணாநிதி

(சென்னை)



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தியின் கொலை மிகப் பாரியதொரு வரலாற்றுத் துன்பியல் நிகழ்வு என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கும் கருத்து குழப்பகரமானதாகவும் எதுவுமே தெளிவற்றதாகவும் இருப்பதாக தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணா நிதி கூறியிருக்கிறார்.

இந்தியாவின் என்.டி.ரி.வி. தொலைக்காட்சிக்கு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்துக் குறித்து கருணாநிதியிடம் இந்து பத்திரிகையின் செய்தியாளர் கடந்த வெள்ளிக்கிழமை அபிப்பிராயம் கேட்டபோது பாலசிங்கம் கூறியிருப்பதை விடுதலைப் புலிளே மறுதலித்திருக்கிறார்கள். அவரது கூற்று குழப்பகரமானது. எதுவுமே தெளிவில்லை என்று பதிலளித்துள்ளார். (கு)

# பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோருக்கு அரச அதிபர் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது

## அமைச்சர் சரத் அமுனுகம உத்தரவு



வடக்கு கிழக்கில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு அரச அதிபர்கள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் சரத் அமுனுகம கண்டிப்பான உத்தரவிட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த இரண்டு நாட்களாக இலங்கையில் உள்ள மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கான கலந்துரையாடல் அமைச்சின் செயலாளர் தலைமையில் இலங்கை நிர்வாக பயிற்றுவிப்பாளர் நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய அமைச்சர், வடக்கு -கிழக்கில் இடம்பெறும் வேலைப் புறக்கணிப்பு சம்பந்தமாக குறிப்பிட்ட தமிழ் மாவட்டங்களின் அரச அதிபர்களுடன் கலந்துரையாடியபோது தொழில் பகிஷ்கரிப்பில் ஈடுபடுபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் ஏற்கனவே திருகோணலை மாவட்டத்தில் கடமை யாற்றும் உத்தியோகத்தர்கள் கடந்த புதன்கிழமை மேற்கொண்ட பகிஷ்கரிப்பு நடவடிக்க்கக்கு எதிராக விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (கு)

# மின்சார சபை சீரமைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு!

இலங்கை மின்சார சபை சீரமைப்பு சட்ட முன் வடிவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை மஹிந்த அரசாங்கம் கோரியுள்ளது.

மின்சார சபை சீரமைப்பு சட்ட முன் வடிவை ஜே.வி.பி. கடுமையாக எதிர்த்து வரும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை நாடவுள்ளதாக மின்துறை அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

இச்சட்ட முன்வடிவு தொடர்பாக ஆலோசனைகளை வழங்குமாறு ஜே.வி.பியிடம் கோரியுள்ளதாகவும் ஆனால் ஜே.வி.பியினர் அத்தகைய யோசனைகளை முன்வைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மின்சார சபை சீரமைப்பு மசோதாவுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக இன்று திங்கட்கிழமை முடிவெடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூர்ய தெரிவித்துள்ளார். (கு)

# அவசர இருதய சிகிச்சைக்கு த.பு.கழகம் 4,70,000ரூபா உதவி

(கிளிநொச்சி)

அவசர இருதய சத்திரசிகிச்சையை வேண்டி நின்ற இரண்டு குழந்தைகளின் மருத்துவ சிகிச்சைக்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் 4 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

நிறுவனத்தின் அவசர மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ் இந்நிதியுதவி வழங்கப்பட்டதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யோகபுரம் மல்லாவியைச் சேர்ந்த கூலித்தொழிலாளியான ஜெயராசாவின் இரண்டு மாதக் குழந்தை ஜோன்சனின் இருதய சத்திரசிகிச்சைக்கு ரூபா நான்கு இலட்சம் நேற்றுமுன் தினம் வழங்கப்பட்டது. குழந்தையின் பெற்றோரிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி இதனை வழங்கினார்.

தேவிபுரம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பாவிசன் மகேந்திரன் என்ற ஏழு மாதக்குழந்தைக்கான இருதய சிகிச்சைக்காக எழுபதாயிரம் ரூபா கடந்த 29ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. நிறுவன துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவிச்சந்திரன் இதனைக் குழந்தையின் பெற்றோரிடம் வழங்கினார்.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட போரினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் அவசர மருத்துவ தேவைக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இத் திட்டம் உதவுகிறது. (கு)

# இராசி பலன்

**03.07.2006**
**(ஆனி 19, திங்கட் கிழமை)**
**சப்தமி காலை 7.34மணிவரை**
**அத்தம் முழுவதும்**
**இராகுகாலம் 7.27-8.57மணிவரை**
**சுபநேரம் 11.57-1.27 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | காரிய நன்மை, போசனசுகம், சத்துரு ஜெயம், ஆரோக்கியம். |
| இடபம் | வயாபார் நன்மை, குடும்பக்கவலை, பிறருக்கு உதவுதல், உடல்நலக்குறைவு. |
| மிதுனம் | தாய்வழி உறவு, முயற்சி தாமதம், ரோக நிலை, கல்வியில் ஆர்வம். |
| கடகம் | சகோதரர் உதவி, தொழில்நன்மை, விருந்துபசாரம், பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | குடும்பக் கவலை, உணர்ச்சி வசப்படல், காரியதாமதம், பணவிரயம். |
| கன்னி | சிந்தனை மிகுதி, புதியதிருப்பம், நண்பர்கள சந்திப்பு, முயற்சி தாமதம். |
| துலாம் | காரிய இடையூறு, சுபசெலவு, சயனசுகக் குறைவு, பித்தரோகம். |
| விருச்சிகம் | எடுத்த காரியம் கைகூடும், உறவினர் சந்திப்பு, பணவருவாய், போசனசுகம். |
| தனுசு | கடின உழைப்பு, பாராட்டு, முயற்சி கைகூடும், ஆரோக்கியம். |
| மகரம் | கட்டுப்பாடு, பிதாசிந்தை, முயற்சி தாமதம். வீண்செலவு. |
| கும்பம் | அமைதிக் குறைவு, வாகனபயம், திடீர் நன்மை, போசன சுகம். |
| மீனம் | குடும்ப மகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி, காரிய அனுகூலம், தனவரவு. |

- வளவன்

# கப்டன் காதர் பயிற்சி பாசறையில் முதலாவது கிராமிய பயிற்சிகள் நிறைவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைத்துப் பிரதேசங்களிலும் கிராமிய படையணிப் பயிற்சிப் பாசறைகள் நடைபெற்று வருகின்றன. அந்த அடிப்படையில் கப்டன் காதர் பயிற்சி பாசறையில் முதலாவது கிராமியப் படையினருக்கான பயிற்சி நிறைவு நேற்று முன்தினம் பிற்பகல் கோவில் போரதீவு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக அகதிகள் கிராமியப் படையணி பயிற்சியை நிறைவு செய்து கொண்டோரினால் கோவில் போரதீவு பாடசாலை முன்றலில் இருந்து அதிதிகளை நாதஸ்வர மேளவாத்தியம் சகிதம் விளையாட்டு மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் பொதுச்சுடரினை மாவட்டதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை தளபதி பிரபா ஏற்றி வைத்தார். அதனையடுத்து மாவீரர்களுக்காக இரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் விளையாட்டு நிகழ்வுகளும் ஆரம்பமானது.

ஆண்களுக்கான கரபந்து இறுதிச்சுற்றுப் போட்டியின் பின்னர் கிராமிய படையணியில் வயது வந்தோருக்கான நூறு மீற்றர் ஓட்டம், இரு நூறு மீற்றர் ஓட்டம், அஞ்சல் ஓட்டம், தலையணை சமர், கயிறு இழுத்தல், வினோத உடை போன்ற போட்டிகள் நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் காலை மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது. போட்டிகள் நிறைவடைந்ததும் லெப். கேணல் ராஜன் அறிவியல் கல்லூரி ஆசிரியர் கீதன், தளபதி பிரபா, மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து வெற்றியீட்டியோருக்கு தளபதிகள், பொறுப்பாளர்கள் மற்றும் பிரமுகர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் தளபதிகளில் ஒருவரான பல்லவன், ஊரக மேம்பாட்டு பேரவை மாவட்ட இணைப்பாளர் க.அரிகரன், பட்டிருப்புக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் செல்வா, வெல்லாவெளிக் கோட்ட தளபதி கோணேஸ், மாவட்ட விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் நேதாஸ், சர்வதேச மாணவர் பேரவை பொறுப்பாளர் செஞ்சுடர், பயிற்சி ஆசிரியர் நிலவன், காவல்துறை அதிகாரி மற்றும் பொறுப்பாளர்கள், போராளிகள் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர். கோவில் போரதீவு பொறுகாமம் புன்ன குளத்தைச் சேர்ந்த சுமார் நானூற்றி ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் கிராமிய படையணி பயிற்சியை நிறைவு செய்து கொண்டனர். (கு)

# இராணுவ சிப்பாயின் உருவ பொம்மைக்கு தீ வைப்பு

(கிளிநொச்சி)

கப்டன் காதர் பயிற்சிப் பாசறையில் கிராமியப் படையணி பயிற்சிகளை நிறைவு செய்து கொண்ட பொது மக்களால் இராணுவசிப்பாயின் உருவப் பொம்மைக்கு தீயிடப்பட்டது.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

நேற்றுமுன்தினம் மாலை கோவில் போரதீவில் நடைபெற்ற கிராமியப் படையணி பயிற்சி நிறைவு நிகழ்வில் இச்சம்பவம் நடைபெற்றது.

அத்துடன் இராணுவ சிப்பாயின் உருவ பொம்மைக்கு தீ வைத்த போது மக்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். (கு)

# அவுஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் அதிர்ச்சி

(சிட்னி)

இலங்கை அரசாங்கத்தினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் தமிழினப் படுகொலை தொடர்பான புகைப் படங்களைப் பார்வையிட்ட அவுஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் பெரிதும் அதிர்ச்சி அடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியத் தமிழர்களில் ஒரு பகுதியினர் ஸ்குயின்லான் டில் அவரைச் சந்தித்த போதே அவர் தனது அதிர்ச்சியையும் வருத்தத்தையும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசால் தமிழருக்கு எதிராக நடத்தப்படும் இனபடுகொலை தொடர்பான படங்களை பார்த்த பின்பே அவர் இக் கருத்தை வெளியிட்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் இலங்கையில் நடைபெற்று வருகின்ற தமிழருக்கு எதிரான இனப்படுகொலைகளைச் சுட்டிக் காட்டி அவுஸ்திரேலிய அரசாங்கம் இவற்றுக்கு எதிரான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுத்து கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். (கு)

# குலதுங்க தாக்குதலாளியின் உந்துருளி குறித்த விசாரணைகள் தொடருகின்றன

(கொழும்பு)

இராணுவத்தின் மூன்றாம் தளபதி பாரமி குலதுங்கவை கொலை செய்த தாக்குதலாளி வந்த உந்துருளி குறித்து தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

தாக்குதல் நடைபெற்ற நாளுக்கு முதல் நாள் இரவு நாடாளு மன்றத்தை அண்மித்த பெலவத்த பிரதேசத்தில் அந்த உந்துருளி நிறுத்தப்பட்டிருந்ததா என்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

தாக்குதலாளியின் உந்துருளி இலக்கத்தை ஒத்த மற்றொரு உந்துருளியை பெலவத்த பிரதேசத்தில் பெண் ஒருவர் கண்டுள்ளதாக வெளியான தகவலையடுத்தே அதுபற்றி விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக விசாரணைகளில் ஈடுபட்டுவரும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய உந்துருளியைத் தான் கண்டபோது அதனுடன் மேலும் இரு உந்துருளிகள் அதனுடன் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் அப்பெண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் காவலரணில் இருந்தவர்களுக்கு தெரிவித்துள்ளார். எனினும் அவர்கள் அதுபற்றி கவனம் செலுத்தவில்லை என்றும் கூறப்படுவது சம்பந்தமாகவும் விசாரணைகளை பொலிஸ் அதிகாரிகள் தொடங்கியுள்ளனர்.

சம்பவம் நடைபெற்றதையடுத்து தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட உந்துருளியின் இலக்கத்தகடு ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

அதனைக் கண்டே அந்தப் பெண் உந்துருளியை அடையாளம் கண்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பன்னிப்பிட்டிய சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் சரத் லூகொட தெரிவிக்கையில், அந் தத் தகவல் பற்றியும் பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர் என்றார்.

பன்னிப்பிட்டிய சம்பவம் தொடர்பில் இதுவரை 102 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (க)

# மக்களின் சமூக நலனைக் கருத்தில் கொண்டு ஊடகங்கள் செயற்பட வேண்டும்-ஜனாதிபதி

மக்களின் சமூகநலனைக் கருத்தில் கொண்டு வெகுஜன



ஊடகங்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

மக்களை தவறான முறையில் வழி நடத்தக் கூடியதாக ஊடகங்கள் செயற்படக் கூடாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வில் செய்மதி ஊடாக இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

தகவல் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு அரசாங்கத்தின் தகவல்திணைக்களத்துடன் இணைந்து நாடளாவிய ரீதியில் நடத்திய 16 ஆவது செயலமர்வு இதுவாகும்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவிக்கையில்,

1989 கலவரங்களின் போது சரியான தகவல்களை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்கு பிராந்திய ஊடகவியலாளர்கள் அரும்பணியாற்றியுள்ளனர்.

சர்வதேச மனிதவுரிமைகளின் கவனத்தை இலங்கையின் பால் ஈர்ப்பதற்கும் அது பேருதவியாக அமைந்தது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இதே வேளை ஊடகவியலாளர்களுக்கு தேவையான மோட்டார் வண்டி சணனி இயந்திர ங்கள் கமரா போன்றவை அலுவலக அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஊடகவியலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டமும் விரைவில் அறிமுகப் படுத்தப்படும்.

எதிர்வரும் புதன்கிழமை இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் ஊடகவியலாளர்கள் இந்த அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வீட்டுத் திட்டம் உட்பட பல்வேறு சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் காலப்போக்கில் அமுல்படுத்தப்படும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (க-9)

# சுதந்திர கட்சித் தலைவராக மஹிந்த; மங்கள சமரவீர கடும் எதிர்ப்பு !

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழு மற்றும் நிறைவேற்றுக் குழு ஆகியவை கடந்த வாரம் மஹிந்தவை சுதந்திரக் கட்சியின் தலைவராக தெரிவு செய்தன.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தலைமையிலான மூத்த சுதந்திரக் கட்சியினர் ஏற்கனவே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில், மஹிந்த வின் தளபதிகளில் ஒருவராக கருதப்பட்ட மங்கள சமரவீரவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மஹிந்த வுக்கு மங்கள சமரவீர ஏற்கனவே கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

தான் கட்சியின் கூட்டங்களில் பங்கேற்று பேசினால் அது கட்சிக்குள் உள்ள ஐக்கியமின்மையை அம்பலப்படுத்திவிடும் என்றும் சந்திரிகாவின் 61ஆம் பிறந்த நாளின் போது இத்தகைய செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அதில் தெரிவித்துள்ளார்.

மேலும் கட்சித் தலைமை மாற்றமானது சந்திரிகாவின் ஒப்புதலுடனும் ஆசிர்வாதத்துடனுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இதனைத் தான் முன்கூட்டியே சுட்டிக்காட்டியுள்ளதாகவும் மஹிந்தவுக்கு அனுப்பிய கடிதத்தில் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சந்திரிகா குமாரதுங்க நாட்டில் இல்லாத போது இத்தகைய செயற்பாட்டை மேற்கொண்டிருப்பதை தம்மால் ஏற்க முடியாது என்றும் கூட்டு நடவடிக்கையின் அடிப்படையிலேயே கட்சி வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்றும் மங்களசமரவீர வலியுறுத்தியுள்ளார்.

தமக்கு இத்தகைய கருத்துகள் உள்ளபோதும் தாம் கட்சிக் கூட்டங்களில் பங்கேற்று இக் கருத்துக்களை வெளிப்படுத்தினால் கட்சியின் ஒற்றுமை பாதிக்கும் என்பதாலேயே கட்சியின் குழுக் கூட்டங்களில் தம்மால் பங்கேற்க முடியாது என்றும் மஹிந்தவுக்கு எழுதிய கடிதத்தில் மங்கள சமரவீர கூறியுள்ளார். (க)

# கருணா குழுவினரின் கடத்தல் சம்பவம் குறித்து ஜனாதிபதியிடம் முறைப்பாடு

(கொழும்பு)

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் கருணா குழுவினர் வர்த்தகர்களைக் கடத்தி பணம் பறிக்கும் சம்பவம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மஹிந்தவுக்கு நெருக்கமான மூத்த அரசியல் தலைவர் இது தொடர்பாக மஹிந்தவை நேரில் சந்தித்து முறைப்பாடு செய்துள்ளார்.

தங்கம் மற்றும் நவரத்தினங்கள் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் இருவரிடமிருந்து பல மாதங்களாக கருணா குழுவினர் பணம் அறவிட்டு வருவதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

Sea Street மற்றும் புறக் கோட்டை ஆகிய பகுதிகளில் வர்த்தகம் நடத்தி வரும் அந்த இரு வர்த்தகர்களின் பெயர்களும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை.

இதேவேளை, வெள்ளவத்தையைச் சேர்ந்த மற்றொரு தங்க நகை வர்த்தகரையும் கருணா குழு கடத்திச் சென்று 20 மில்லியன் ரூபாய் பணத்தைப் பெற்றுக் கொண்டபின்னரே சில நாட்களுக்கு முன்னர் விடுவித்துள்ளது.

அதற்குமுன்னதாக மூன்று தமிழ் வர்த்தகர்களை கருணா குழு கடத்திச் சென்று பணம் பறித்துக் கொண்ட பின்னர் விடுவித்துள்ளது. அந்த மூன்று வர்த்தகர்களும் மொத்தம் 40 மில்லியன் ரூபாய் பிணைத் தொகை செலுத்தியுள்ளதாகத் தெரிகிறது. (க)


மணி பல்லவத்தில் மஹோற்சவம்



நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

இன்று எட்டாம் திருவிழா

## எல்லாம் தரும்

தனம் தரும் கல்விதரும் ஒரு
நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வவடிவும்
தரும் நெஞ்சில் வஞ்சனை இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே !
அபிராமி அந்தாதி

## திருநாள் தருவாய் தாயே!

மணிபல்லவத்து மகா நாயகியே
மாண்புறு நாகபூஷணி யென்னும் தாயே!
மாவுலகின் உயிரெல்லாம் மகிழ்ந்துவாழ
மழை யென வரமருளும் தெய்வமே! - இங்கு
பாலர் விருத்தர் பெண்களென மலிகின்ற
பாதக மரணங்கள் மருவிட வரமருள்வாயே!
மங்கலச் சேதிகளையெம் செவிகள் நுகர்ந்திடும்
மகோன்னதத் திருநாள் அருள்வாயே !
-அகியோபி-

## எம்மான் இரங்கும்மே

நல்ல மலர் கொண்டு நாகபூஷணியை
நல்ல வாறு துதிசெய வல்லராவர்
படமாடும் பாம்புக் குடையாள் என்பார்க்குத்
திடமாம் திருவருள் தீய தீயுமே
நயினை அம்மனை நினைக்க நெஞ்சார
எயினைமுன் னெரித்த எம்மால் இரங்கும்மே
சிவ:சண்முகவடிவேல்

## அருள்வாய் தாயே!

அலைக்கரம் கொண்டு அன்னை கடலவள்
தாலாட்டி மகிழ்வுறும் நயினைத் தீவினில்
மலைமகள் நீயும் சிறப்புறக் கோவிலைக்
கொண்டனை ! பயமிக நிதமிம் மண்ணினில்
அலைந்திடும் எங்களின் வாழ்வது ஓங்கிட
அமைதி நிலவிட மகிழ்வது பெருகிடும்
நிலையது திகழ்ந்திட நல்லதாம் தீர்வினை
நாக பூஷணித் தாயே அருள்வாய் !
நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்

## எழுந்தருளி வாராயோ

சோகமது நிறைந்தே சூழுகின்ற சோதனைகள்
செகத்தினிலே எந்நாளும் சரிதமாய் பெருகிவர
தாகமொடு நொந்துமனம் தேடுகின்ற நிம்மதியை
தமிழ்த்தாயின் சேய்களது சேதிகளை செவிமடுத்தே
நாகதலை நிழலில் நாளுமுறை நகர்த்தியே
நாகபூஷணி அம்பாளே! நாவில்நிலை தாயே !
ஆகமங்கள் நிறைந்த அகம்நிறைந்த அம்பிகையே !
எழுந்தருளி வருவாயே உனதருளை தருவாயே !
அல்லையூர் கே.ஆர்.திருத்துவராஜா

## வல்லவளே! காத்திடம்மா

நம்பிவந்து தொழுவோரைக் காப்பவளே
நயினை யிலே கோவில் கொண்ட நாகம்மா
அம்பிகையே ! உந்தன் பாதங்கள் சரணடைந்தோம்
அமைதியுடன் வாழும் வழி காட்டிடம்மா!
பொன்கொழிக்கும் எங்களது தேசம்
போரென்னும் கொடுமையிலே மீண்டும் சிக்காமல்
வன்முறைகள் யாவினையும் அழித்தொழித்து
வல்லவளே ! எம்மினத்தை காத்து அருளிடம்மா
சுபம்
மு.முத்துக்குமார்

## இன்று ஒரு தகவல்

# மனநிறைவு

ஒரு பெரிய அரசன் இருந்தான். யயாதி அவனது பெயர். அவனுக்கு 100வயது ஆகிவிட்டது. வாழ்வில் அனுபவிக்க வேண்டிய எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டான். ஒரு நாள் மரணம் அவனைத்தேடிவந்தது. "இதோ பாரப்பா உனக்கு நேரம் வந்து விட்டது. உன்னை அழைத்துக்கொண்டு போகத்தான் வந்திருக்கிறேன் புறப்படு" என்றது.

இவன் பெரிய ராஜாதான்... போர்களில் வீரம் காட்டியவன் தான்.... இருந்தாலும் இப்போது நடுங்க ஆரம்பித்தான். "என்னது... இவ்வளவு விரைவில் வந்துவிட்டாய் நான் நுறுவருடம் தானே வாழ்ந்து முடித்திருக்கிறேன் அதற்குள் அழைத்துப் போக வந்து விட்டாயே என்றான்". என்னப்பா இப்படிச் சொல்கிறாய் உனது பிள்ளைகள் கூட தாத்தாவாகி விட்டார்களே இன்னும் உனக்கு என்ன வேண்டியிருக்கிறது இந்த உலகத்தில் என்றது மரணம்.

அந்த ராஜாவுக்கு நூறு மனைவிகள் நூறு பிள்ளைகள் அதனால் யோசித்துவிட்டுச் சொன்னான் "இதோ பார்... நீ வந்து விட்டு வெறுங்கையுடன் போகமாட்டாய் என்று எனக்குத் தெரியும். என்பிள்ளைகள் நூறு பேர் இருக்கிறார்கள் அவர்களில் யாரையாவது கேட்டுப்பார்க்கிறேன் எனக்குப் பதிலாக நீங்கள் யாராவது போகிறீகளா?" என்று யாரையாவது ஒருவரை சம்மதிக்க வைத்து அனுப்புகிறேன் என்னை இன்னும் நூறு வருடம் வாழ விடு என்றான்.

மரணம் சொல்லியது 'உனக்குப் பதிலாக யாராவது ஒருவர் என்னுடன் வந்தால் போதும் இருந்தாலும் நீ எல்லோருக்கும் அப்பா எல்லோரையும் விட நீதான் அதிகநாள் வாழ்ந்திருக்கிறாய் எல்லாம் அனுபவித்திருக்கிறாய் அப்படி இருக்கும் போது நீ இப்படி இருந்தால் உன் பிள்ளைகள் எப்படி என்னுடன் வர சம்மதிப்பார்கள்" என்றது.

இருந்தாலும் அந்த ராஜாவுக்கு நம்பிக்கை இருந்தது பிள்ளைகளை ஒவ்வொருவராகக் கூப்பிட்டுக்கேட்டுப் பார்த்தான். மூத்த பிள்ளைகள் ஒன்றும் பேசவில்லை நழுவிப்போக ஆரம்பித்தார்கள் கடைசிமகனுக்குப் பதினாரு வயதுதான் ஆகிறது அவன் முன்னால் வந்தான் "நான் தயார் என்னை அழைத்துக் கொண்டு போ" என்றான்.

இவனைப் பார்த்ததும் மரணமே இரக்கப்பட ஆரம்பித்தது "என்னப்பா இது ஒன்றும் தெரியாதவனாக இருக்கிறாய் உன்னை விட வயதான உன்னுடைய மூத்த சகோதரர்கள் 99பேர்... அவர்கள் இன்னும் இந்த உலகில் வாழ ஆசைப்படுகின்றனர். நீ இப்படிச் சொல்கிறாயே நன்கு யோசித்துச்சொல்" என்றது. நான் நன்கு யோசித்துத்தான் சொல்கிறேன் என் அப்பா நுறு வருடம் வாழ்ந்திருக்கிறார் அப்படியும் திருப்தியடையவில்லை என் சகோதரர்கள் என்னைவிட அதிக காலம் இந்த உலகில் வாழ்ந் திருக்கிறார்கள் அவர்களுக்கும் திருப்தி ஏற்படவில்லை.

இதைப்பார்க்கும் போது எனக்கு ஒரு விடயம் நன்கு புரிகிறது அதாவது நான் நூறு வருடம் வாழ்ந்தால் கூட எனக்கும் திருப்தி ஏற்படப்போவதில்லை அப்படி இருக்கும் போது நான் இப்போது இறந்தால் என்ன இன்னும் 90 வருடம் கழித்து இறந்தால் என்ன பேசாமல் என்னை அழைத்தக்கொண்டுபோ என்றான் மரணம் அந்தப் பையனை அழைத்துக்கொண்டு போய்விட்டது.

அதன்பின் நூறுவருடம் கழித்து மரணம் மீண்டும் வந்து ராஜா வைப்பார்த்தது. இப்போதும் அந்த ராஜா அதே நிலைமையில் தான் இருந்தார். இப்போது அவன் என்ன சொன்னான் தெரியுமா? "இந்த நூறு வருடம் போனதே தெரியவில்லை அவ்வளவு வேகமாகப் போய்விட்டது. என்னால் நிதானமாக அனுபவிக்க முடியவில்லை எனது வயதான பிள்ளைகள் எல்லாம் ஏற்கனவே செத்துப் போய்விட்டார்கள். இப்போது எனக்கு இன்னொரு தலை முறைவந்து விட்டது, இப்போது எனக்குப் பதிலாக இன்னொரு வனை அனுப்புகிறேன் அவனை அழைத்துக்கொண்டு போ இன்னும் நூறுவருடம் என்னை வாழவிடு" என்றான்.

மரணம் சரி என்று சொல்லி வேறு ஒருவனை அழைத்துக் கொண்டு போனது இப்படியே ஒன்பது முறை நடந்தது இப்படியே அந்த ராஜா தொள்ளாயிரம் வருடம் அதிகமாக வாழ்ந்தான். பத்தாவது முறையாக மரணம் வந்து நின்றது. இப்போது அவன் சொன்னான் "நீ முதல் முறை வந்தபோது நான் எப்படி திருப்தி அடையாதவனாக இருந்தேனா அதே நிலையில்தான் இப்போதும் இருக்கிறேன்.

இப்போதும் எனக்கு உன்னுடன் வர விருப்பம் இல்லை இருந்தாலும் வருகிறேன் ஏனென்றால் திருப்பித்திருப்பி எத்தனை முறைதான் உன்னிடம் சலுகை கேட்பது? கேட்டதே மிகவும் அதிகம் இருந்தாலும் ஒரு விடயத்தை இப்போது தெளிவாகப் புரிந்து கொண்டேன் ஆயிரம் வருடத்தில் என்னால் திருப் தியடையமுடியாவிட்டால் பத்தாயிரம் வருடம் இந்த உலகில் வாழ்ந்தால் கூட என்னால் திருப்தியடைய முடியாது புறப்படு போகலாம்" என்றான்.

இதுதான் சார் இப்போது நாம் வாழும் உலக வாழ்க்கை. இதை நாம்புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக ஒரு பெரியவர் இந்தக் கதையை நமக்கு எடுத்துச்சொல்லியிருக்கிறார்.

இந்தக் காலத்துக்குடும்பஸ்தர் ஒருவரைத் தேடிக்கொண்டு ஒரு நாள் மரணம் வந்தது. அவர் முன் நின்றது. "நான்தான் மரணம் வந்திருக்கிறேன் உன்னை அழைத்துக்கொண்டுபோக" என்றது.

இவருக்கு கோபம் வந்துவிட்டது. உடனே பளாரென்று அதன் கன்னத்தில் அறைந்துவிட்டார் மரணம் கன்னத்தைத் தடவிக் கொண்டே "ஏன் என்னை அறைந்து விட்டாய்?" என்றது. "பின்னே என்ன? எவ்வளவு காலம் உனக்காகக் காத்திருப்பது? ஏன் இவ்வளவு லேட்?"என்றார் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உலகத்தின் எல்லா வல்லமைகளும் ஊடகத்துக்குள் தான் புதைந்துள்ளது

## என்கிறார் சு.ப. தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

தமிழ் ஊடகத்துறை வளர்ச்சியின் தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி பெரும் பங்காற்றும் என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் ஊடக அறிவியல் கல்லூரியின் கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் இன்றைய நாள் மகிழ்ச்சி மிக்கதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும் ஏனென்றால் எங்கள் தேசிய கட்டுமானங்களிலே முக்கியமான நிகழ்வாக இன்றயை ஊடகக்கல்லூரியின் கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு அமைந்துள்ளது.

எங்களுடைய தேசியத் தலைவருடைய நீண்டநாள் கனவு நனவாகின்றது. தலைவரின் நீண்டநாள் சிந்தனையின் அடிப்படையில் இக் கல்லூரி செயற்படத் தொடங்கியுள்ளது.

ஊடகக்கல்லூரி தொடங்கவேண்டுமென்று மிக அக்கறையெடுத்து தான் சந்தித்த மூத்த பத்திரிகையாளர்கள் அறிஞர்கள் எல்லோரிடமும் தனது ஆலோசனையை வழங்கி வேலைத் திட்டத்தினை ஆரம்பிக்கும்படி தலைவர் வலியுறுத்தி வந்தார்.

முதல் முதல் எமது மூத்த பத்திரிகையாளர் கோபு ஐயாவைச் சந்திக்கின்ற போது தன்னுடைய விரும்பத்தை தலைவர் தெரிவித்திருந்தார். தொடர்ந்து அறிஞர்கள், பத்திரிகையாளர்களிடம் தனது விருப்பத் தையும், எமது தேசத்திலே ஊடகக்கல்லூரியின் அவசியத்தையும் வலியுறுத்தி வந்தார். தலைவர் எண்ணப்படி ஊடகக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊடகத்துறை எமது தேசத்தில் வலுமிக்க சக்தியாக வளரும் தற்போது வளரவில்லையென்று கூறவில்லை. ஒப்பீடு செய்கின்ற போது எங்களுடைய ஊடகத்துறை இன்னும் பலமடங்கு வளர்ச்சியடைய இருக்கின்றது. ஏனெனில் உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகள் போல் தான் எமது தேசத்தில் எமது மக்கள் உள்ளனர்.

தேசியத் தலைவருடைய காலத்தில் அடிமைத் தனங்களிலிருந்து எமது இனம் மீண்டு நாம் சுதந்திர மனிதர்களாக, சுதந்திர தேசத்தவர்களாக இந்தப் பூமிப் பந்தில் வாழும் நிலையை இன்று நாம் உருவாக்கிக் கொண்டு இருக்கின்றேரம்.

இந்த நூற்றாண்டில் உலகம் எங்கோ சென்று விட்டது. மனித வாழ்வு மிக உயர்ந்த நிலை அடைந்து விட்ட போதிலும் நாம் அதோடு இணைந்து பயணிக்க முடியாத துர்ப்பாக்கியமான நிலைக்குள் நிற்கின்றோம்.

நாம் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து முழுமையாக விடுபடவில்லை. விடுபடுவதற்காக முயன்று கொண்டு இருக்கின்றோம், விடுபட்டுக்கொண்டிருக்கின்றோம்.

ஊடகத்துறையின் வளர்ச்சி என்பது எமது தேசத்திலலே முழுமையடையாததால் நாம் பெற்ற அனுபவங்கள் நிறையவே இருக்கின்றன. எங்களுடைய தேசம் அடிமைத் தனத்திலே இருந்து விடுபடவேண்டிய நிலையில் உள்ளது.

இதற்காக நாம் நிறைய உழைக்க வேண்டியுள்ளது. அனைத்து துறைகளிலுமே நாம் முன்னேற வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் இன அழிப்பு, இன ஒடுக்குமுறை பல்வேறு வடிவங்களில் திணிக்கப்படும். துறைசார்ந்த ரீதியில் நாம் வளர்ந்து செல்வதை அடக்குமுறையாளர்கள் தடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இவை எல்லாவற்றையும் மீறிக்கொண்டு எமது தேசமும் மக்களும் வளர்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

அதிலே ஊடகத்துறையும் முக்கியமான பங்கை வகிக்கின்றது. இன்று உலகத்தினுடைய வளர்ச்சிப் போக்கு மாற்றம் உலக ஒழுங்கு இதற்கு ஊடகப் பலம் பெரும் பங்காற்றுகின்றது.

கருத்து மண்டலத்திலே எது ஆதிக்கம் செலுத்துகின்றதோ அது வலிமையோடு இருக்கின்றது. எங்களுடைய விடுதலைப் போராட்டமும் கருத்து மண்டலத்திற்குள் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வகையில் வல் லமையுடன் ஊடுருவிச் செல்லக்கூடிய நிலை யில் நாங்கள் இருக் கின்றோம்.

அந்த வகையில் எமது ஊடகத்துறை வளர்ச்சி அடைந்து செல் லவேண்டும். அதற்கு எமது மண்ணிலே ஒரு ஊடகக்கல்லூரி உரு வாக்கப்பட வேுண்டு மென்பது அவசியமாக இருந்தது.

எமது மண்ணிலே ஒரு ஊடகக்கல்லூ ரியை தொடங்க வேண் டுமென்பது தலைவரின் நீண்டகால விருப்பமாக இருந்தது. ஊடக கல்லூரியை தொடங்குவதற்கு காலம், சூழல் அவையெதுவும் சந் தர்ப்பத்தை வழங் கவில்லை. தலைவரின் வழிகாட்டல் ஊடகக் கல்லூரியை தொடங் குவதற்கு காரணமாக இருந் தது.



எமது மூத்த பத் திரிக் கையாளர்களான சிவராம், நிம லராஜன், நடேசன் போன்றவர்கள் எமது தேசியத்தை கட் டிக்காப்பதிலும் இனம் சந்திக்கின்ற கொடு மைகளை ஊடக உல கத்திற்கு ஏற்ற வகை யில் வெளிநடையில் வெளிக்கொணரக்கூடிய வல்லமை மிகுந்த ஊடகவியலாளர்கள் பலரை ஆக்கிரமிப் பாளர்களால் இல்லா தொழித்துள்ளனர்.

ஒரு இன அழிப்பின் வடிவம் தான் எங்களுடைய ஊடக உலகத்தை சிதைப்பது. ஏனெனில் ஊடக உலகத்தில் கருத்து மண்டலத்தில் நாங்கள் பலமாக வேமாக ஊடுருவிச் செல்லக்கூடிய சக்திபடைத்தவர்கள் என்ற அச்சம் சிங்கள தேசத்திற்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உள்ளது.

ஊடகத்துறையை அழிப்பதிலும் சிங்கள் ஆட்சியாளர்கள் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

ஊடக உலகிற்குள் நாம் ஊடுருவிச் செல்ல வேண்டியுள்ளது. அதற்கு சிறந்த பயிற்சி ஆற்றல், அனுபவத்தை எமக்குள் கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் ஊடகத் துறையிலுள்ள நுட்பங்கள் விடயத்தானங்களை நாம் ஒழுங்கு முறைப்படி கற்றறிந்து தேர்ச்சி பெறுவதன் ஊடா கத்தான் எமது இலக்கை அடைய முடியும். அந்த வகை யில் எமது ஊடகக்கல்லூரி முக்கிய பங்கை வகிக்கப் போகின்றது.

பேச்சுக்காக நாம் வெளிநாடுகள் சென்றபோது ஊடகங்களுக்கு அஞ்சுவதுண்டு காரணம் தமிழ் ஊடகங்களை விட சிங்கள பேரினவாதத்திற்கு ஆதரவாக கருத்துக்கள் பரப்படக் கூடிய சிங்கள் ஊடகங்கள் கூடுதலாக காணப்படும்.

இதன் காரணமாக எமது செய்திகள் தவறான கோணத்தில் வெளியிடப்படும் சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு. இதன் காரணமாகவே் தமிழ் ஊடகங்கள் பலமடையவேண்டிய நிலை உணரப்பட்டது.

இன்று இந் நிகழ்விற்கு வருவதற்கு முன்னர் கூட ஒரு அதிர்ச்சி, ஒரு இணையத் தளத்தில் ஒரு செய்தி மகிந்த ராஜபக்சவுக்கு நேரடிப் பேச்சுக்களுக்காக புலிகள் ஏதோ எழுத்து மூலமாக சமர்ப்பித்துள்ளார்களாம்.

அப்படியொன்றும் நடக்கவில்லை. ஆனால் ஒரு ஊடகம் செய்தியை வெளியிட்டு விட்டது. எங்களுக்கு ஒரு குழப்பம் மகிந்த ராஜபக்ஷ கள்ளத் தொடர்பு, இரகசியத் தொடர்பு எம்முடன் வைக்கமுயல நாம் அதை அறிந்தெறிந்த பின்னர் இப்படியொரு செய்தி வெளிவந்துள்ளது.

ஊடக உலகம் எப்படி வல்லமை பொருந்தியது என்பது இது ஒரு சின்ன உதாரணம். ஊடக உலகம் இன்று பலம் வாய்ந்தது. ஊடக உலகம் எல்லாவற்றையும் சாதிக்கும். உலகத்தின் எல்லா வல்லமைகளும் ஊடகத்துக்குள் தான் புதைந்துள்ளது என்றார்.

முற்பகல் 9.00மணிக்கு ஆரம்பித்த இந் நிகழ்வில் முதன்மைச் சுடர்களை பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழீழ தேசியத் தொலைக்காட்சியின் பணிப்பாளர் சி.கருணாகரன், பணிப்பாளர் சிதம்பரதிருசெந்திநாதன், தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் க.றஞ்சன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றி வைத்தார்.

அரங்க நிகழ்வுகள் ஊடகவியலாளரும் சட்டத் தரணியுமான பொன்.பூலோகசிங்கம் தலைமையில் இடம்பெறறது.

வரவேற்புரையினை ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தி நிகழ்த்தினார். கருத்துரைகளை பேராசியரிய்ர் அ.சண் முகதாஸ், பாதுகாவலன் ஆசிரியர் ரூபன்மரியாம் பிள்ளை, மூத்த அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு ஆகியோர் நிகழ்த்தினார்.

நன்றியுரையினை வெள்ளிநாதம் ஆசிரியர் சிறி இந்திரகுமார் நிகழ்த்தினார். தொடர்ந்து தமிழ் ஊடகக் கல்லூரியின் கற்கைநெறி ஆரம்பமாகியது. (க)

# இனப்பிரச்சினையைத் தீர்க்க நிரந்தர கொள்கையை வகுக்கும் ஸ்ரீ.சு.கட்சி

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக நிரந்தர கொள்கையை வகுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கட்சி வட்டாரங்கள் இது பற்றி மேலும் கூறியதாவது,

வடக்கு-கிழக்கு பிரச்சினை சம்பந்தமாக சுதந்திரக் கட்சியிடம் இதுவரை நிரந்தர கொள்கை இல்லை இதனால் மஹிந்த ராஜபக்ஷவின் கண்காணிப்பின் கீழும் அவரின் ஆலோசனைளுக்கு அமையவும் இந்த கொள்கைகளை வகுப்பதற்கு சுதந்திரக்கட்சியின் மத்திய குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் செயற்படுத்தப்படவுள்ள பிரதான அரசியல் திட்டம் இது. பொதுஜன ஐக்கிய முன்னணி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி என இது வரை வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்கு பல கொள்கைகள் வகுக்கப் பட் டாலும் அவை கூட்டணி என்பதால் தங்கள் கட்சிக்கு என்று ஒரு கொள்ளையை வகுப்பதற்கு சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க)




# பிரேஸிலின் வெற்றி நடையை முறியடித்து; பிரான்ஸ் நம்பிக்கையுடன் அரையிறுதிக்கு

பிரான்ஸ் 1-0 என்ற கோல் கணக்கில் ஐந்து முறை சம்பியன் பிரேசிலை வீழ்த்தி அரையிறுதிக்குநம்பிக்கையுடன்முன்னேறியது.

நேற்று முன்தினம் பிராங் பர்டில் நடந்த பரபரப்பான 4 ஆவது காலிறுதியில் பிரேசில், பிரான்ஸ் அணிகள் மோதின. போட்டி ஆரம்ப விசில் ஊதிய முதல் நிமிடத்தில் இருந்து பிரான்ஸ் மிரட்டியது.



அதி லும் அணித்தலைவர் ஜிடன் பிரமாதம் பண்ணினார். இவர் பந்தை அழகாக நகர்த்தி அப்ப டியே தொடையில்வாங்கிதலையால் முட்டி மின்னல் வேகத்தில் தட்டிச் சென்று பிரேசிலுக்கு தண்ணி காட்டி னார். இவரது அசத்தல் ஆட்டத் திற்கு முன் பிரேசிலின் ரொனால் டோ எல்லாம் காணாமல் போனா ர்கள். பிரான்சின் எழுச்சியால் முரட் டு ஆட்டத்திற்கு மாறிய பிரேசில் அணித்தலைவர் கபுலூசியோ ஆகியோர் மஞ்சள் அட்டை பெற்ற னர். முதல் பாதி முடியும் நேரத் தில் பிரான்ஸ் அடுத்தடுத்து தாக்கு தல் நடத்தியது. பந்தை மின்னல் வேகத்தில் கொண்டு சென்ற இந்தஅணியின் வீரர் வியர்ரா வை பிரேசிலின் ஜுவான் பெனா ல்டிஏரியாவுக்குமிக அருகில் முரட்டு த்தனமாக தாக் கினார். இதற்காக சிவப்பு அட்டை வழங்கலாம். ஆனால் ஸ்பெ யின் நடுவர்லூயிஸ் மதினாமஞ்சள் அட்டை காட்டி னார். தவிர பிறி -கிக் வாய்ப்பும் கொடுத் தார். தியறி ஹென்றி அடித்த சொட்





ரொனா ல்டோவின் கையால் பட்டுச் செல்ல பிரான்ஸுக்கு மீண்டும் பிறி-கிக் வாய்ப்பு. ரொனால் டோவுக்கு மஞ்சள் அட்டை எச்சரிக்கை வழங்கப்பட்டது. இம் முறை ஜிடேன் அடித்த பந்தை ஒரு வழியாக பிரேசில் வீரர்கள் தடுத் தனர். இத்தோடு முதல் பாதி முடிந்த தற்கான விசில் ஊதப்பட்டது. அப்பாடாதப்பித்தோம் என்ற உணர் வுடன் பிரேசில் வீரர்கள்வெளியேற முதல் பாதி கோல் இல்லா மல் முடிந் தது.

இரண்டாவது பாதியிலும் பிரான்ஸ் ஆதிக்கம் தான். 57 ஆவது நிமிடத்தில் அந்த அற் புதம் நிகழ்ந்தது. பிரான் ஸுக்கு பிறி -கிக் வாய்ப்பு. அதை அடிக் கிறார் ஜிடேன். நல்ல உயர த்தில் பறந்து வந்த பந்துகோல்போஸ் டை நெருங்க அப்படியே வலது காலா ல் தியரிஹென்றி தட்டிவிட பந்து வலைக்குள் நுழை ந்தது பிரான்ஸ் வீரர்கள் வெற்றி கொண் டாட்டம் போட் டனர்.

கோல் வாங்கிய அதிர்ச்சியில் பிரே சில் வீரர்கள் உறைந்து போயி னர். ஹென்றி கோல் மூலம் முன்னி லை (1-0)பெற்ற பிரா ன்ஸ் தாக்கு தலை தொடர் ந்தது. 53ஆவது நிமிடத்தில் ஹென்றி அடித்த பந்து கோல் போஸ்டு க்குள் புகுந் தது. ஆனால் நடுவரி னால்ஒவ்-சைட் என அறிவிக்க வாய்ப் பு நழுவியது

மறுபக்கம் பிரேசில் முன்கள வீரர்கள் ஏமாற்றினர் ரொனால்டோ வை பார்ப்பதே அரிதாக இருந் தது. 62 ஆவது நிமிடத்தில் இன் னுமொரு முன்கள வீரரான ஆட்ரி யோனோ களமிறக்கப்பட்டார். இவர் வந்தும் பிரேசில்ஆட்டத்தில் முன் னேற்றம் ஏற்படவில்லை 75 ஆவது நிமிடத்தில் பிரேசில் அணியில் இன்னொரு மாற்றம் இம்முறை அணித்தலைவர் கபு வெளியேற சின்சின்கோ உள்ளே வந்தார். அணித்தலைவர் பொறுப் பை கோல் கீப்பர் திடா ஏற்றார். 78ஆவது நிமிடத்தில் காக்கா வுக்கு பதிலாக இளம்ராபின்ஹோ உள்ளே வந்தார். இந்த மாற்றங் களெல்லாம் பிரேசிலுக்கு கைகொடு க்கவில்லை. கடைசி நிமிடத்தில் ரொனால்டோ மேற்கொண்ட முயற் சிகளும் பலன் அளிக்க வில்லை . இறுதியில் பிரான்ஸ் அணி பிரே சிலை 1-0என்ற கோல் கணக்கில் வீழ்ந்தி அரையிறுதிக்கு முன்னே றியது

நடப்பு சம்பியனாக வந்த பிரேசில் அதிர்ச்சி தோல்வியுடன் வெளியேறியது வெற்றி நடையிரு ந்த பிரேசில் அணியின் தோல்



வியை அந்த நாட்டு இரசிகர்களால் தாங்க முடியாமல் அரங்கத்தில் கண் ணீர்மல்க சோகத்தை வெளிப் படுத்தினர்.

**அமிர்தன்**



## உலகக் கிண்ணம் ஐரோப்பாவிற்கே;

18ஆவது உலகக் கிண்ணத்தை ஐரோப்பிய கண்டத்தைச் சேர்ந் தஒருஅணி சுவீகரிக்கப்போகின்றது. இதற்கு காரணம் தென் அமெரி க்காவின்பிரேஸில் அணி ஐரோப்பாவின்பிரான்ஸ் அணியிடம் தோல்வியுற்று வெளியேறியமை.

தற்போது காலிறுதிக்கு ஐரோப் பாவின் நான்கு அணிகள் முன்னே றியுள்ளன. முதல் அரையிறுதியில் ஜேர்மன் – இத்தாலி மோதுகின்றன.

இரண்டாவது காலிறுதியில் பிரான்ஸ் -போர்த்துக்கல் அணி கள் மோதுகின்றன. எனவே நான்கு அணிகளும்ஐரோப் பாவை சேர்ந்த அணிகள். பொறு த்தி ருப்போம் எதிர் வரும் 9ஆம் திகதி தெரியும் யாருக்கு கிண்ணம் என்று.

## உதைபந்தாட்ட ஆய்வாளர்களின் கருத்துக்களை மாற்றியமைத்த பிரான்ஸ்

சர்வதேச உதை பந்தாட்ட ஆய்வாளர்களின் கணிப்பையேமாற் றியமைத்துள்ளது பிரான்ஸ் அணி.

காரணம் உதைபந்தாட்ட ஜான் பவன் கள் தமது கணிப்பின் படி பிரே சில் அணி இறுதி ப்போட்டிவரை முன் னேறும் என கருத்துக்களைக்கூறியி ருந்தனர். ஜான்டவன்பீலே இந்தியா வின் தினமலர் பத்திரிகை க்குதமது முன்னேற்றத்தின் இறுதிப்போட்டியில் பிரேசில் -ஜேர் மனி அல்லது பிரேசில்-ஆர்ஜென்டீனா அணி களே மோதுமென தெரிவித் திருந்தனர் அந் த முன்னேற்றத்தை எமது பத்திரிகை உட்பட பலஊடகங்கள் வெளிப்ப டுத்தி யிரு ந்தமை குறிப்பி டத்தக்கது.

எனினும் இக்கணிப்புகளையெல் லாம் புறந்தள்ளி பிரேஸிலுக்கு எதி ராக பிரா ன்ஸ் அணி தமது முழுத்திறமையை யும் வெளிப்படு த்தி வெற்றி பெற்றனர்.

# தமிழக அகதி முகாம்களில் ஈழத் தமிழர்கள் படும் அவலங்கள்!

விடைகொடு எங்கள் நாடே... பனைமரக் காடே... பறவைகள் கூடே...மறுமுறை ஒருமுறை பார்ப்போமோ? புலம்பெயர் வாழ்வின் துயரங்களை வலியோடு பதிவு செய்த பாடல் இது.

இதோ மறுபடியும் இலங்கையில் யுத்தம் ஆரம்பமாகி விட்டது. உயிர்பயம் உதித்துள்ள தங்களின் ஆதி சொந்தங்களைத் தேடி, கள்ளத்தோணியில் கடல் கடந்து, அகதிகளாகத் தமிழ்நாட்டுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள் இலங்கைத் தமிழர்கள்.

நாளுக்கு நாள் அகதிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. ஆனால், ஏற்கனவே அங்கிருக்கும் அகதிகள் முகாம்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. இதுபற்றி அகதிகள் முகாம்களுக்கு நேரில் சென்று பார்த்து வந்து அறிக்கை கொடுக்குமாறு விடுதலைச் சிறுத்தைகள் எம்.எல்.ஏ.வும் எழுத்தாளருமான

ரவிக் குமாரிடம் சொல்லியிருக்கிறார் முதல்வர் கருணாநிதி.

இந்நிலையில்தான் உதாரணத்திற்கு திருச்சி வாளவந்தான் கோட்டையிலிருக்கும் அகதிகள் முகாமுக்கு இந்திய இதழ் ஒன்றின் ஊடகவியலாளர்கள் சென்றிருந்தனர். திருச்சி–தஞ்சைசாலையில் துவாக்குடி அருகே ஐந்து கிலோமீற்றர் உள்ளடங்கி இருக்கிறது வாளவந்தான் கோட்டை அகதிகள் முகாம். இங்கே சுமார் 320 குடும்பங்களில் ஆயிரம் பேர் வசிக்கின்றனர்.இந்த முகாம், தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு இலங்கை அகதிகள் முகாம்களில் உபரியாக இருந்தவர்களை தங்க வைப்பதற்காக அமைக்கப்பட்ட தற்காலிக முகாம். அந்தத் தற்காலிக முகாமுக்கும் இப்போது வயது பதினாறு ஆகிவிட்டது.

உள்ளே போகும் பாதையே முகாமின் நிலைமையை நமக்குச் சொல்லி விடுகிறது என்கின்றனர் அந்த ஊடகவியலாளர்கள் . கருவேலமுட்காடுகள், அதற்கு நடுவே தெரியும் சின்னச் சின்ன குடிசைகள், சாரம் (கைலியை இப்படித்தான் அழைப்பார்கள்) பனியனில் நடமாடும் ஆண்கள், நைட்டிகளில் வளையவரும் பெண்கள் என்று பரிதாபமாய் இருக்கிறது முகாம் என கவலையுடன் கூறும் ஊடகவியலாளர்கள் . ஆனாலும் இவர்கள் இருக்கும் வசதிகளுக்குள் வாழ்ந்து கொண்டு அரட்டை , கேலி , தமாசு எனத் தங்களது நிரந்தர கஷ்டங்களைத் தற்காலிக சந்தோஷங்களுக்குள் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளனர். அந்த ஊடகவியலாளர்கள் தமது முகாம் விஜயம் பற்றி விவரிக்கையில்,

முதலில் முகாமின் தலைவரான சுப்பிரமணியனிடம் பேசினோம்.

''நாங்க 90 ஆம் ஆண்டு வரைக்கும் புழல் முகாமில் இருந்துவிட்டு இங்க வந்தம். ஆரம்பத்தில் இங்க சௌகரியமாத்தான் இருந்தம். கடந்த ஜெயலலிதா ஆட்சியில்தான் கெடுபிடிகள் அதிகமாயிட்டு. ஒரு நபருக்கு மாதம் இருநூறு ரூபா பண உதவியும். ஆறு கிலோ அரிசியும் கொடுக்கிறாங்கள். அந்த இருநூறு ரூபாயிலயும் நாங்க அதிகப்படியா உபயோகிக்கிற மின்சாரத்துக்கென்டு தலைக்குத் தொண்ணூறு ரூபா வரை யூனிட்டுகளுக்கும் விலை ஏறி இப்பிடி ஆகிப்போச்சு.

உயிர் தப்பி வந்தவர்கள். இங்க அரசு 320வீடுகள் கட்டி குடுத்திருக்கு. அந்த வீடு பத்துக்குப் பத்து அளவுள்ளது. மேலே ஆஸ்பெஸ் டால் சீட் போட்டது. வெயில் காலத்துல ரொம்ப வெக்கையா இருக்கும். வேற குறைகள் இருந்தாலும் சொல்வதற்கு வாய் வரமாட்டேன்கிறது. காரணம் நாங்கள் இங்க வாழ வந்தவர்கள்''

''திருகோணமலையில் விவசாயம் செய்து கொண்டு இருந்த என் மனைவியை ஆமி கொலை செய்தது. அதன்பிறகு அங்க கொஞ்சம் இங்க கொஞ்சம் நாட்கள் மறைந்து வாழ்ந்து விட்டு, இங்கே புலம்பெயர்ந்து வந்தம். வந்தன்னைக்கு எங்களுக்கு இடம்கொடுத்து ஆதரவு கொடுத்த நாட்டை குறை சொல்லக் கூடாது தானே. திரும்ப ஊருக்கே போகலாம் எண்டு பதிவு செஞ்சிருந்தன். ஆனால் திரும்ப அங்க போர் மூளும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் ஒரே யோசனையாயிருக்கு''

''இங்க இருக்கிற எங்க மக்கள் ஏதோ கிடைக்கிற கூலி வேலைகளைச் செய்யுறாங்கள். குறிப்பாக, இங்க பக்கத்துல உள்ள குவாரிகளில் கல் உடைக்கும் வேலை பாத்து பிழைப்பு நடத்துறாங்கள். அப்படிச் சம்பாதிச்சு தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி படிக்க வைக்கிறாங்கள். எங்கட பிள்ளைகள் நல்லா படிக்கும்'' ஏன்றார்.

அடுத்து பேசினார் விக்கி என்கிற விக்கினேஸ்வரன்

''நாங்க இலங்கை முல்லைத்தீவிலிருந்து வந்தம். 90 ஆம் ஆண்டில் இருந்து இங்க வாளவந்தான் கோட்டையில் இருக்கிறம். இங்கே எங்கட பிள்ளைகளோட படிப்புக்கு ரொம்பச் சிரமமாக கிடக்கு. முதல்ல கலைஞர் பீரியட்ல மருத்துவம், பொறியியல் படிப்புக்களில் இலங்கை அகதிப் பிள்ளைகளுக்கென்டு கோட்டா இருந்தது. கடந்த சில வருடங்களாக அதை நீக்கிட்டாங்கள்.இப்ப திரும்பவும் கலைஞர் அரசு அதைக் குடுக்குமென்று எதிர்பார்க்குறம்''

''எங்கட பிள்ளைகள் படிக்கும் வசதி இல்லாம கூலி வேலைக்குப் போய், சின்ன வயசுலேயே கல்யாணமும் பண்ணிக் கொண்டு கஷ்டப்படுறாங்கள். எங்களுக்குச் சீக்கிரம் ஊருக்குப் போய், எங்கட நிலத்துல விவசாயம் செஞ்சு வாழ்க்கை நடத்தவேணும் என்டுதான் ஆசை. என்னைக்குப் போவமோ தெரியல்ல'' என்றவரின் கண்களில் ஏக்கம் தெரிந்தது.

நம் முன் வந்த புவனா ஆக்னஸ் என்ற பெண்மணி கூறுகையில்,

''ஆடிக்குழாயில தண்ணி அடிச்சு கொதிக்க வச்சுக் குடிச்சாலும் , அந்தப் பாத்திரத்துல அடியில சுண்ணாம்பு படியுது. நாங்களும் கலெக்டர், கமிஷனர் என்று அதிகாரிகளுக்கு மனு குடுத்தம். ஆனா, அவங்க எதுவுமே கண்டுக்கலை.பதினாறு வருசமா கல்லுடைச்சு காசு சேர்த்து பிள்ளைகள வளத்தன்.இப்ப தை மாசம் மூணாந்தேதி என்ட இருபத்து மூணு வயசு மகன் இறந்து போயிட்டான். காரணம் கிட்னி பிரச்சினை''

''இங்க முகாமுக்குள் இருக்கிற நிறையப் பேருக்கு அடிக்கடி உடம்பு சுகமில்லாப் போகும். டாக்டர் கிட்ட போனா கிட்னியில் பிரச்சினை என்டு சொல்லுவார். அப்பிடி கிட்னி பிரச்சினை வந்து கணக்கு(நிறைய)பேர் செத்துப் போயிட்டாங்கள். ஆபீஸ்மார் உங்களப் போல வந்து கேக்கிறாங்கள்... எதுவ்ம் செய்யிறதில்லை. இந்த வெயில் காலத்திலயும் மாலை ஆறு மணியில் இருந்து காலை ஆறுமணி வரை தான் மின்சாரம் தர்றாங்கள். காரணம், நாங்க பாவிக்க சொன்ன அளவைவிட, அதிகமாக மின்சாரம் பயன்படுத்துகிறோம் என்டு சொல்றாங்க'' என்றார் பரிதாபமாக.

அப்போது நம்முன் அழைத்து வந்து நிறுத்தப்பட்ட ஜெகன் என்பவருக்குச் சிறு நீரகக் கல் தொடர்பாக அறுவைச் சிகிச்சை செய்திருந்தார்கள். அவரது வலது இடுப்பில் ஒரு நீண்ட தழும்பு இருந்தது. இப்படி இடுப்பில் தழும்புடன் பலர் முகாமுக்குள் உள்ளனர்.

அடுத்து நாம் சந்தித்த சக்திவேல் மிகவும் ஈனமான குரலில் பேசினார்.

''எனக்கு 52 வயசு ஆகுது. இங்க உள்ள தண்ணியைக் குடிச்சு எனக்குக் கிட்னியில் பிரச்சினை வந்தது. டாக்டர் கிட்ட மருந்து எடுத்தன். டாக்டர் கிட்னி மாத்தணும் என்டு சொல்லிவிட்டாங்க. ஆன்ால் , அதுக்கு ரொம்பச் செலவாகும். அதனால நாட்டு மருந்து சாப்பிட்டுக் கொண்டு அப்பிடியே இருக்கிறேன். சின்ன வேல கூட என்னால் செய்ய ஏலாது என்று சொல்லி விட்டாங்கள்'' என்றார் சோகம் நிரம்பிய வார்த்தைகளில்.

அன்னலட்சுமி என்ற பெண்பேசும்போது,

''இங்க டொய்லெட் வசதிகள் இல்ல. கருவேலக் காட்டுக்குள்ள தான் போகணும்.நாங்க வந்தபோது பரவாயில்லை. இப்ப இங்க ஃபேக்டரிகளும், தொழிற்சாலைகளும் , கல்குவாரிகளும் அதிகமா வந்தாச்சு. அதனால ஆள் நடமாட்டம் அதிகமாயிட்டு. பெண்களுக்கு டொய்லெட் போவது மிகவும் கஷ்டமான விஷயமாகிட்டு. எங்களுக்கு டொய்லெட் கட்டிக் குடுத்தால் நல்லது. இதுதான் எங்களுக்கு முக்கியமான பிரச்சினை. அதேபோல, பதினாறு வருசத்துக்கு முன் அரசாங்கம் கட்டிக் குடுத்த வீடுகள் இடிஞ்சுபோச்சு. ஒவ்வொரு ஆண்டும் நாங்க அதைச் சீரமைச்சுத்தான் இருக்கிறோம்'' என்றார்.

இங்கே நிலை இப்பிடியென்றால் திருச்சி ஏர்போட்டுக்கு மிக அருகிலிருக்கும் கொட்டப்பட்டு அகதிகள் முகாமின் நிலை சற்றே பரவாயில்லை. நகருக்கு வெகு அருகில் அமைந்துள்ள இந்த முகாம் பர்மாவிலிருந்து வந்த அகதிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டது. அதுவே பின்னர் இலங்கை அகதிகளுக்காகப் பயன்பட்டது.

இங்கே நானூறு குடும்பங்களில் சுமார் ஆயிரத்து 500 பேர் வசிக்கிறார்கள். வாளவந்தான் கோட்டையில் குடிசைகள் என்றால், இங்கே ஹவுசிங் யூனிட் வீடுகள் போன்ற கட்டிடங்களில் வாழ்க்கை. ஆனால், பொலிஸ் மற்றும் க்யூ பிராஞ்ச் கண்காணிப்பு இங்கே அதிகம். இங்குள்ள பிள்ளைகளுக்கு படிப்பு என்பது அவ்வளவு சிரமமில்லை. இங்கும் முக்கிய குறை கழிப்பிட வசதிதான். இருக்கும் சொற்ப எண்ணிக்கையிலான கழிப்பிடங்களையே எல்லோரும் பயன்படுத்த வேண்டும் என்பதால் பெரும் சுகாதாரக் கேடு நிலவுகிறது.

இப்படி நாம் பார்த்த விஷயங்களைத் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷிஷ் வச்சானியிடம் தெரிவித்தோம். நாம் சொன்னவற்றை நிதானமாகக் கேட்டுக் கொண்ட அவர்,

''அகதிகள் என்றாலும் , அவர்களும் மனிதர்களே... நீங்கள் நாளை மாலை என்னை சந்தியுங்கள்'' என்று சஸ்பென்ஸாகச் சொல்லிவிட்டு அதிகாரிகளை அழைத்துக் கொண்டு இரண்டு முகாம்களையும் சுற்றி வந்தார்.

அடுத்த நாள் மாலை நமக்கு கலெக்டர் அலுவலகத்திலிருந்து அவசர அழைப்பு. உடனே அங்கே விரைந்தோம். நம்மிடம் பேசிய கலெக்டர்

''நீங்கள் சொன்னபடி வாளவந்தான் கோட்டையில் மின்கட்டணத்தில் பிரச்சினை இருப்பது உண்மைதான். அதற்கு இரண்டு மீற்றர்கள் மட்டுமே இருப்பதும் ஒரு காரணம். அதுகுறித்து மின்வாரிய அதிகாரிகளுடன் பேசி முடிவு எடுக்கிறேன். அதேசமயம், அதிகமான மின் கருவிகளைப் பயன்படுத்தி அரசுக்கு இழப்பு எற்படா வண்ணம் அங்குள்ள மக்களும் பார்த்துக் கொள்ள வேண்டும். சுகாதார மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

சுண்ணாம்புப் படிவு இல்லாத காவிரி நீர் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.இதற்காக ரூபா 10.67 இலட்ச ரூபாவில் குடிநீர் கொண்டு வரும் திட்டம் வெகுவிரைவில் செயல்படுத்தப்படும்.அதேபோல், திருச்சி கொட்டப்பட்டு அகதிகள் முகாமுக்குக் கழிப்பிட வசதி செய்ய 7.98 இலட்ச ரூபாவில் இன்னொரு திட்டமும் விரைவில் செயல்படுத்தப்படும்'' என்றார்.

''எங்கட சொந்தங்கள் எங்களைக் கைவிட மாட்டாங்கள்'' என்று மிகுந்த நம்பிக்கையோடு தாயகம் திரும்பும் தமிழர்கள், எந்தச் சூழ்நிலையையும் சகித்துக் கொண்டு வாழப் பழகி விட்டார்கள்.

**நன்றி– "குமுதம்"**

## குளத்து நீர் மாசடைவதால் ஏற்படும் பாதிப்புகள்

(கோண்டாவில்)

யாழ்.நகரத்தில் அமைந்துள்ள பல குளங்கள் பாசி , கல்வீனியா, தாமரை போன்ற நீர்த் தாவரங்களால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மூடப்பட்டுள்ளன. இதனால் குளத்து நீர் தடித்ததாகவும், பச்சைக் கூழாகவும் மாசடைந்து இருப்பதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதனால் நோய்க்காரணிகளும், நோய்க் காவிகளும் பெருகுவதனால் மலேரியா, யானைக் கால் நோய் போன்றவை பரவக் கூடியதாக உள்ளது. குளத்து நீர் மாசடைவதற்கு நீர்த் தாவரங்கள் மட்டுமன்றி பல்வேறு மனித நடவடிக்கைகளும் காரணமாக அமைகின்றன.

நகரக் குப்பை, கூழங்களை குளங்கள், குளங்களை அண்டிய நிலப் பரப்புக்களில் கொட்டுவதனால் குளங்களின் அழகு கெட்டுப் போவதுடன் நீர், நிலப் பழுப்புக்கள் மாசடைந்து சூழற் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

குளங்கள் நீண்ட காலமாக தூர்வாரப்படாமையால் நீர்க் கொள்வனவு குறைவடைவதுடன் நிலத்தின் படுகை சேற்றுத் தன்மையாக மாறுகிறது. குளத்துடன் தொடர்பான வடிகால் அமைப்புக்கள் சீராகப் பேணப்படாமையால் வெள்ள நீர், கழிவு நீர் என்பன வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்கின்றன. இதனாலும் குளங்களின் நீர்ப்பரபப்பு மாசடையும் நிலை ஏற்படுகிறது.

குள நீர் மாசடைந்து வருவதனால் குளங்களின் அருகிலுள்ள கிணறுகளும் மாசடையக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகும். குளங்களில் நீரைத் தேக்கி வைக்காவிடில் கிணறுகளின் ஊற்றுக்களும் வற்றி விடலாம் எனவும் அஞ்சப் படுகிறது.


யாழ்.நகரத்தில் நீர் நிலையில் சார்ந்த கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படுவது குறைவு. இருப்பினும் குளங்கள் மாசடைவதனால்விவசாய, கால்நடை தேவைகள் மற்றும் சலவைத் தொழில் போன்ற பொருளாதார பயன்பாட்டிற்கே குளங்களைப் பயன்படுத்த முடிவதில்லை. குளிப்பதற்கும் , பொழுது போக்கு வசதிகளுக்கும் குளங்கள் பயன்படுவதில்லை.

நகரங்கள், கிராமங்களின் உருவாக்கம், வளர்ச்சி என்பன உள்ளூர் நீர்ப் பரப்புக்களையே மையமாகக் கொண்டுள்ளன. அந்த வகையில் யாழ்.நகரத்தில் உள்ள குளங்களை பேணுவதனால்நகரத்தின்தரத்தினைஉயர்த்த முடியும். (து-36)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 16

முருக-தனுஷ்கோடி



*கூரிய வாளின் முனையில்*

அந்த போரில் இந்தியரைக் கேட்காமலே இந்தியாவும் பிரிட்டனும் ஆதரவாகப் போரில் குதித்திருப்பதாக வெள்ளையர் ஆட்சி அறிவித்தது. காந்திஜி உட்பட அனைத்துத் தலைவர்களும் அதனை மறுத்தனர். இந்தியாவே உரிமையிழந்து அடிமைப்பட்டிருக்கும் நிலையில் வேறு நாடுகளுக்காக அது எப்படிப் போர்ரில் குதிக்க முடியும் என்றார் காந்திஜி போரின் முடிவிலேனும் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதாக உறுதியளித்தல் வேண்டுமானால் பேர் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதைப் பற்றி யோசிக்கலாம் என்றும் காந்தஜி கூறினார்.

இது என்ன பித்துக் குளித்தனம் நான் பிரிட்டிஷ் சாம் ராஜ்த்தின் பிரதமாராக இருப்பது சாம்ராஜ்யத்தின் கல்லறை கட்டும் பணிக்குத் தலைமை தாங்குவதாற்காக அல்ல அந்த அரை நிர்வாணப் பக்கிரி காந்தியையும் அவரது சீடர்களையும் அடக்க எனக்கு துப்பாக்கிகள் கூடத்தேவையில்லை, வெறும் லத்திக் காமபுகளே போதும் என்று மமதை யுடன் பதிலளித்தா பிரிட்டிஷ்பிரதமர் சர்வின்ஸ்டன் சர்ச்சில்.

அப்படியானால் எங்கள் ஆதரவு கிடையாது என அறிவித்தது. இந்தியா மக்களின் விடுதலைப் பேரவையான இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை.

கெஞ்சினால் மிஞ்சுவதும் மிஞ்சினால் கெஞ்சுவதுமாகவே தனது அரசியல் பொருளாதார கொள்கைகளை நீண்ட காலமாக வகுத்து வைத்துக் கொண்டிருந்த வெள்ளையர் 1942 மார்ச்சில் சர்ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்பவரை இந்திய சுதந்திரம் பற்றிய பிரச்சினைகளை அறிந்து வரும்படி தூது அனுப்பினார். 1942 மார்ச் 25 இல் காந்திஜியும் மௌலானா அபுல்கலாம் ஆசாதும் கிரிப்ஸை சந்தித்துப் பேசினார்கள். ஆனால் அந்த மாகானுபாவரோ இந்து முஸ்லிம் சிக்கலைக் கிளப்பி நாட்டுப் பிரிவினை விஷயத்தை வளர்த்து சுதந்திரக் கோரிக்கைகளைத் தள்ளிப்போடும் வழக்கமான பிரிட்டிஷ் ராஜதந்திரத்தையே கையாண்டார். சில நிபந்தனைகளோடு கூடிய சுதந்திரத்தைப் போர் முடிவில் வழங்கத் தயார் என்றும் அறிவித்தார்.

பின்னால் வெள்ளையார் மனது வைத்தால் ஏதோ சுதந்திரம் கிடைக்குமாம்! இது ஒரு பின் தேதியிட்ட செக் Post Dated Cheque) இதை ஏற்பதற்கில்லை என்று கூறி கிரிப்ஸ் திட்டத்தை நிராகரித்தார் காந்திஜி. இந்த நேரத்தில் இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு ராஜாஜி ஆதரவு காட்டினார். அதன் விளைவாக 1942 ஜூலை 15இல் காந்திஜியே வல்லபாய் படேலின் வாக்கிற்கு இணங்க ராஜாஜிக்குக் கடிதம் எழுதிக் காங்கிரசில் இருந்து விலகிவிடச் செய்தார்.

வெள்ளையருக்கு வால்பிடித்து அவர்களுக்கு ஆதரவாக அவர்களிடம் மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டு யுத்தப் பிரசாரம் செய்த கும்பலும் நாட்டில் அப்போது இருந்தே வந்தது.

*வெள்ளையனே வெளியேறு*

இந்த நிலையில் தான் பம்பாய் மாநகரிலுள்ள கோவாலியா தெப்பக்குள் மைதானத்தில் 1942ஜூலை 8ந் திகதி இந்திய தேசிய காங்கரஸ் மகாசபை கூடியது.

வரலாற்றுப் புகழ் பெற்ற அந்தக் கூட்டத்திற்கு அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜ், தலைவர் சத்தியமூர்த்தி, முத்துரங்க முதலியார் எம் பக்தவத்சலம் முதலிய 30 பேர்களுக்கு மேல் தமிழக்திதல் இருந்து பம்பாய்குச் சென்றனர்.

அந்த மகாசபைக்கு மௌலானா அபுல்காலம் ஆசாத் தலைமை வகித்தார். காந்தியின் விருப்பப்படி வெள்யையனே வெளியேறு (Quit India) என்ற வரலாறு படைத்த தீர்மானத்தை நேருஜி முன் மொழிந்தார்.

அப்போது நேருஜி கூறினார். இந்தியாவின் தன்மானம் பேரம் பேசக்கூடியதெரு பொருளல்ல, போராட்டம் முடிவற்ற போராட்டம். இதுவே ஆங்கிலப் பேரரசுக்கு எனது பதில் (Strugg le... Eternal Struggle That is my reply to the british empire) என முழங்கினார்.

சர்தார் வல்லபாய் படேல் வழி மொழிந்தார். மற்றும் மௌலானா அபுகலாம் ஆசாத் , கவிக்குயில் சரோஜினி தேவி, ஜேபி கிருபாளனி பண்டித பந்த், சத்தியமூர்த்தி ஆகியோரும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். .

*செய் அல்லது செத்து மடி*

இறுதியாக காந்திஜி பேசினார். 140 நிமிடங்கள் உணர்ச்சிப் பிளம்பாகப் பேசினார். உடனடியாகச் சுதந்திரம் வந்தாக வேண்டும் .இன்றிரவே சுதந்திரம் கிடைப்பது உறுதியானால் அது விடியு முன்பே கிடைத்தாகவேண்டும் . இந்த நிமிடம் முதல் நீங்கள் ஒவ்வொருவரும் சுதந்திர மனிதராக எண்ணிக் கொள்ள வேண்டும். இனி நீங்கள் அடிமைகள் இல்லை சுதந்திரத்தின் சாரமே இதுதான். தான் அடிமையல்ல என்ற உணர்வு ஏற்பட்ட உடனேயே அடிமைத் தளைகள் உடைந்து நொறுங்கி விடும் . இதோ ஒரு தாரக மந்திரமும் சொல்லுகிறேன். இதை மறக்கமால் மனதில் பதிய வைத்து கொள்ளுங்கள் நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும் செய் அல்லது செத்துமடி (Do or Die) இந்தியாவை விடு விப்போம் அல்லது அந்த முயற்சியில் செத்து மடிவோம் அடிமைத்தனம் நிலைத்திருப்பதைப் பார்க்க நாம் உயிர் வாழத் தேவையில்லை என்று முழங்கினார் . அப்போது இரவு 10மணிக்கு மேல் இருக்கும்.

மகாசபைத் தீர்மானம் விவரம் வருமாறு

1. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி உடனே முடிய வேண்டும். 2 .நாசிசம் பாசிசம் ஏகாதிபத்திய முறை இவைகளை ஒழிக்கச் சுதந்திர இந்தியா உதவும் . 3. பிரிட்டன் தானே ஒதுங்க இணங் காவிட்டால் காந்திஜியின் தலைமையில் அகிம்சா தர்மச் சுதந்திரப்போார் நடத்தப்படும் .4 . அன்னிய ஆட்சி ஒழிந்த்தும் வகுப்பு ஒற்றுமை ஏற்படும். அதன் பின்னர் சகல வகுப்பின் பிரதிநிதிகளையும் கொண்ட தற்காலிகமான ஓர் இந்திய அரசாங்கம் அமைக்கப்படும்.

இந்தத் தீர்மானம் எதிர்ப்பு அதிகமின்றிப் பலத்த வரவேற்பு முழக்கதுடன் நிறைவேறியது. அதைக் காணச் சகியாத வெள்ளை அரசாங்கம் மறுநாள் (ஆகஸ்டு)9ந் திகதி காலை 5 மணிக்கெல்லாம் காந்திஜி , கஸ்தூரி பாய் மீரா பென்படலே், பியாரேலால், மகாதேவ தேசாய் ,சரோஜினி தேவி, வல்லபாய் படேல், நேருஜி, மௌனான, அபுல்கலாம் ஆசாத் போன்ற எல்லாத் தலைவர்களையும் கைது செய்து எங்கே அழைத்துச் செல்கிறார்கள் என்ற தகவலே வெளிவராமல் காந்திஜியின் குழுவினரைப் புனா ஆகாகாக் மாளிகையிலும் நேருஜி முதலானோரை அகமத் நகர் கோட்டை யிலும் சிறை வைத்தனர்.

ஆகஸ்ட் 9ல் பொழுது புலர்ந்தது. தங்கள் கண்ணின் கருமணியனை தலைவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டுக் கண்காணாச் சிறைகளில் அடைக்கப்பட்ட செய்திகளைக் கேள்வியுற்றதுமே, பம்பாய் நகரம் எரிமலையைப் போலக்குமுறி எழுந்தது! ஆகா என்றெழுந்தது! ஆகஸ்டு புரட்சி! எங்கு நோக்கினும் மக்கள் கூட்டம்! ஆரவாரம்! தடியடி துப்பாக்கிச்சூடு! (தொடரும்)



இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் அடிக்கடி மோதல் ஏற்படுவதை தொடர்ந்து பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது கொழும்பில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸ்காரர் பெண்களின் அடையாள அட்டையை வாங்கி சரிபார்க்கிறார்.

## கடற்படையினரின் கடல் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும்!

(கொழும்பு)

கடற்படை யினரின் ரோந்து நடவடிக் கைகளை அதிகரிப்பதற்கும் கடற் படை முகாம்களின் பாதுகாப்பையும் பலப்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள் ளது.

கடந்த சில வாரங்களாக கடற்படையினர் மீதும் கடற்படை முகாம்கள் மீதும் விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டு வருவதை அடுத்தே பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு தீர்மானிக்கபட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் வழமையாக மேற்கொள்ளப்படும் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது டன் கடற்படையினர் விடுமுறை யில் செல்கின்ற போதும் விடுமுறை முடிந்து முகாம்களுக்கு செல் கின்ற போதும் ஏற்றிச் செல்கின்ற படகுகளுக்கு பலத்த பாதுகாப்பு வழங் குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ள தாக அரசு விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)

## இலங்கை பத்திரிகை ஆசிரியர்களுக்கு தீர்வையற்ற முறையில் வாகனங்கள்

(கொழும்பு)

மஹிந்த சிந்தனை கொள்கை திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஊடகவியலாளர்களுக்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இவ்வருடத்திற்கான வரவு செலவுத்திட்டத்திலும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான ஆலோசகருமான அஜித் கப்ரால் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு இன்டர் கொன்டினென்டல் ஹோட் டசில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அஜித் கப்ரால் மேலும் கூறியதாவது, மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு இலங்கையிலுள்ள பத்திரிகை ஆசிரியர்களுக்கு தீர்வையற்ற முறையில் வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் .

அத்துடன் ஊடகவியலாளர்களுக்கான புலமைப்பரிசில்கள் உட்பட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

பத்திரிகை ஆசிரியர்களுக்கு தீர்வையற்ற முறையில் வாகனங்களைபெற்றுக்கொடுக்கும்நடவடிக்கை இவ்வருடம் மேற்கொள்ளப்படும்.

இவ்வருடத்திற்கான வரவு செலவுத்திட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. (க-7)

## கற்பிட்டியில் தீவிரசோதனை

(மன்னார்)

கற்பிட்டி பகுதியில் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளனரா என்பதை அறிய கடற்படையினர் மற்றும் விமானப்படையினர் தொடர்ந்து சோதனை நடத்தி வருகின்றனர்.

கற்பிட்டி உச்சமுனை பகுதியில் 12 சந்தேகப் படகுகள் காணப்பட்டதாகவும் அதையடுத்து விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் சோதனை நடத்தப்பட்டுவருவதாகவும் பொலிஸ் அதிகாரி ரோசன் பெர்னாண்டோ தெரிவித்தார். இதனிடையே கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் கற்பிட்டி கடற்பகுதியில் வெடிசத்தம் கேட்பதையடுத்து அப்பகுதி மக்கள் பதற்றமடைந்தனர் கடற்படையினர் தான் கடலில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அறிந்த பின்னர் மக்கள் இயல்பு நிலைமைக்குத் திரும்பினர்ா. (க)



கடந்த மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற தெல்லிப்பளை மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பண நிகழ்வில் தெல்லிப்பளை உதவி பிரதேச செயலர் சு.முரளீதரன் உரையாற்றுவதையும், அருகில் (இடமிருந்து வலமாக) சு. து.சண்முகநாதக்குருக்கள், கு.சிவலிங்கம், மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு மதி ச. இளங்கோவன் க.கணேசராஜா அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காலணாம்.

# ஜர்காவியை கொன்றதற்காக மகிழ்ச்சி அடையாதீர்கள் அதிபர் புஷ்சுக்கு ஒசாமா பின்லேடன் கடும் மிரட்டல்!

## மோதலுக்கு தயார் என அமெரிக்காவும் அறிவிப்பு!!



(வாஷிங்டன்)

அல்- ஜர்காவியை கொலை செய்ததற்காக மகிழ்ச்சி அடைய வேண்டாம். உங்களுக்கு எதிரான எங்கள் தாக்குதல் தொடரும் என அமெரிக்கா அதிபர் புஷ்சிற்கு அல்-குவைதா தீவிராத இயக்க தலைவர் ஒசாம பின்லேடன் மிரட்டல் விடுத்துள்ளார்.

சர்வதேசபயங்கரவாதியும் அல்-குவைதா தீவிரவாத இயக்க தலைவருமான ஒசாம பின்லேடன் தலைமறைவாக உள்ளார். அவ்வப்போது இணையதளம் மூலமாக அமெரிக்காவிற்கு மிரட்டல் விடுத்து வருகிறார். இந்தாண்டு மட்டும் ஒசாமா பேச்சு அடங்கிய மூன்று டேப்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இருந்தாலும் கடந்த 2004ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கு பின் பின்லேடன் குறித்த வீடியோ டேப் எதுவும் வெளியிடப்படவில்லை. இந்நிலையில் சமீபத்தில் பின்லேடன் பேச்சு அடங்கிய வீடியோ டேப் ஒன்று இஸ்லாமிய இணையதளத்தில் வெளியானது. மொத்தம் 19 நிமிடம் ஓடக்கூடிய இந்த டேப்பில் பின்லாடனின் பேச்சு இடம்பெற்றுள்ளது அல்-ஜர்காவியின் வீடியோ காட்சிகள் பின்லேடனின் புகைப்படங்கள் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. இந்த டேப்பில் அமெரிக்கா அதிபர் புஷ்சிற்கு மிரட்டல் விடுத்துள்ள ஒசாம பேசியுள்ளதாவது.

அல்-குவைதா இயக்கத்தின் ஈராக் தலைவர் அல் -ஜர்காவி அமெரிக்க படையினரால் கொல்லப்பட்டுள்ளார். இதற்காக அமெரிக்கா மிகவும் மகிழ்ச்சி அடை யவேண்டாம் இஸ்லாமிய சிங்கமாக செயல்பட்ட அவர் புனிதப் போரில் கொல்லப்யட்டு விட் டார் ஒரு சிங்கம் இறந்தால் வேறொரு சிங் கம் வரும் இதனால் அமெரிக்காவிற்கு எதிரான எங்களின் தாக்குதுலை நிறுத்தப் போவது இல்லை அமெரிக்காவிற்கு எதிராகவும் அவர்களது ஆதரவு நாடுகளுக்கு எதிராகவும் எங்களது தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும் இறைவனின் விருப்பத்தோடு எங்களது நடவடிக்கைகளை தொடர்வோம் ஈராக், ஆப்கானிஸ்தான், சோமாலியா ஆகிய நாடுகளில் உங்களது (அமெரிக்கா) படையினரை கொலை செய்வோம். அல்-ஜர்காவியின் உடலை அவரது குடும்பத்தினரிடம் அமெரிக்கா ஒப் படைக்க வேண்டும்.

இவ்வாறு அந்த டேப்பில் பின்லேடன் பேசியுள்ளார்.

### அமெரிக்காவின் அறிவிப்பு

இதற்கிடையில் ஈராக்கில் அல்-ஜர்கா விக்கு பதிலாக புதிய தலைவராக பொறுப் பேற்றுள்ள அபு அயுப் அல்மஸ்ரியினக் இருப் பிடம் குறித்து தகவல் தெரிவிப்பவர்களுக்கு ரூ22.5 கோடி பரிசு தரப்படும் என அமெ ரிக்கா அறிவித்துள்ளது. அல்-மஸ்ரியின் இருப்பிடம் குறித்துதகவல் அறிந்தவர்கள் ஈராக்கில் உள்ள அமெரிக்க தூதரகம் அல் லது மற்ற நாடுகளில் உள்ள அமெரிக்கா தூதர கத்தை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதற்கிடையில் ஒசாமா பின்லேடனுடன் நீண்ட கால மோதலுக்கு தயாராக இருக்கிறோம் என அமெரிக்கா அறிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்கா வெளியுறவு அமைச் சக செய்தி தொடர்பாக ஆடம் எரேலி கூறுகையில்,

சமீபத்தில் இணையதளத்தில் வெளியான வீடியோ டேப் ஒசாமா பின்லேட னுடையது தான் என்பதை எங்களின் மத்திய புலனாய்வுத்துறையினர் உறுதி செய்துள்ளனர் பின்லேடனின் சமீபத்திய செய்தி மூலம் அவர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தலாம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் ஒசாமா பின்லேடனுடன் நீண்ட கால போருக்கு நாங்கள் தயாராகி விட்டோம் அமெரிக்காவை பழிவாங்கத்துடிக்கும் அவரின் சதிகளை முறியடிக்க நாங்கள் இன்னும் தீவி ரவமாக செயல்படுவோம் கடந்த காலத்தில் எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோ அதே போன்ற நடவடிக்கைகள் தொடரும் அவர்களின்திறன் என்ன என்பதை நாங்கள் அறிந்துள்ளோம் கடுமையாக தாக்குதல் நடத்தி அந்த அமைப்பைச்சேர்ந்த பலர் கொல்லப் பட்டபோதும் அவர்கள் இன்னும் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாகவுள்ளனர் அதனால் அல்-குவைதாவுக்கு எதிரான போர் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் என்றார்.

(க)



சீனாவில் கடும் மழையால் பிஜியே பகுதியில் சூழ்ந்துள்ள வெள்ளத்தில் சிக்கியவர்களை பொலிஸார் மீட்டு பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து செல்வதைப்படத்தில் காணலாம்

# இஸ்ரேல் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரபுக்கைதிகளை விடுவிக்கக் கோரிக்கை

இஸ்ரோல் சிறைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ள ஆயிரம் அரபுக்கைதிகளை இஸ் ரேல் விடுதலை செய்ய வேண்டுமென பலஸ் தீனத்தில் இயங்கும் மூன்று போராளிக் குழுக் கள் கோரியுள்ளது.

அத்துடன் காஸா நிலப்பரப்பில் நடத்தப் படும் தாக்குதல்களையும் இஸ்ரேல் உடனடி யாக நிறுத்த வேண்டுமெனவும் அந்தக் குழுக் கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரோல் படைவீரர் ஒருவரை தடுத்து வைத்துள்ள மூன்று போராளிக்குழுக்களே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய படைவீரர் விடுவிக்கப்பட வேண்டுமனால் அவர்களது கோரிக்கைகள் நிறை வேற்றப்படவேண்டுமென கமாஸ் இயக்கத்தின் இராணுவப் பேச்சாளர் தெரிவித் துள்ளார்.




இதனை ஒரு நிபந்தனையாகவும் இஸ் ரேல் கருத்தில் கொள்ளலாம் என அவர் குறிப் பிட்டுள்ள படைவீரரை விடுவதற்காக அரபுக்கை திகளை விடுவிப்பது குறித்து எந்தவித மான ஆலோசனைகளையும்நடத்தப்போவதில்லை என்று இஸ்ரேல் தெரிவித்துள் ளது. (கு-9)

# ஈராக் பெண் எம்.பி கடத்தப்பட்டார்!

(பாக்தாத்)

ஈராக்கில் அரசுக்கு எதிராகவும் அமெ ரிக்கா கூட்டு படையினருக்கு எதிராகவும் தீவி ரவாதிகள் தொடர்ந்து கார் குண்டு தாக்கு தல்களை நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் சன்னி பிரிவினருக்கும், ஷியா பிரிவினருக்கும் இடையே நடந்து வரும் மோதல்கள் அங்கு உள்நாட்டு போரை ஏற் படுத்தும் அபாயத்தை ஏற்படுத்தி உள் ளது. ஷியா முஸ்லிம்களின் மசூதிகளை சன்னி பிரிவினர் குண்டு வைத்து தகர்க்கிறார்கள்.

இந்த நிலையில் பெண் எம்.பி. ஒருவர் கடத்தி செல்லப்பட்டார். ஈராக் பாராளுமன் றத் தில் 275 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் சன்னி பிரிவை சேர்ந்த பெண் எம்.பி.தைசி நஜி மஷாதனி இவர் தியாலா நகரில் இருந்து பாக்தாத் நகருக்கு காரில் வந்து கொண்டிருந்த போது துப்பாக்கி முனையில் இவரது காரை மர்ம மனிதர்கள் மடக்கினார்கள் அந்த பெண் எம்.பி. மற்றும் அவருடன் வந்த 8 காவலாளிகளையும் அந்தமர்ம மனிதர்கள் கடத்தி சென்றனர். (க)

# சர்ச்சைக்குரிய குடிவரவுச்சட்டம்

தொழில் தேர்ச்சி உள்ளவர்களை நாட் டிற்கு உள்வாங்குவதற்காக பிரான்ஸ் பாரா ளு மன்றத்தில் சர்ச்சைக்குரிய குடிவரவுச் சட்டம் அனுமதிக்கப்பட்டது.

இந்த சட்டம் தொடர்பாக குடிவரவு குழுவின ரும் எதிர்க்கட்சியினரும் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர். தேர்ச்சியற்ற தொழிலா ளர்களுக்குப் பதிலாக தொழில் தேர்ச்சி யுள்ள தொழிலா ளர் களை உள்வாங்குவதனை உற்சாகப்படுத்துவதற்காகவே இச் சட்டம் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது. (க)

# ஈராக்கில் கார்குண்டு வெடிப்பு; 66பேர்பலி 99 பேருக்கு காயம்!!

(பாக்தாத்)

ஈராக்கின் சதர் நகரின் மார்க்கெட் பகுதி யில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த கார் குண்டுவெடித்ததில் 66 பேர் இறந்தனர்.

99 போர் காயமடைந்தனர். பொலிஸ் ரோந்து வாகனம் அப்பகுதி வழியாக சென்ற சிறிது நேதரத்தில் இச்சம்பவம் நடைபெற் றுள்ளது.

காய்கறிகள் இருந்த லாரி ஒன்றில் மறைந்து வைக்கப்பட்டிருந்த குண்டை அதன் டிரைவர் வெடிக்கச் செய்து தானும் இறந்தார். என்று ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

ரிமோட் மூலம் குண்டு வெடிக்கச் செய்யப் பட்டது என்று மற்றொரு தகவல் தெரிவிக் கின்றது.

வெடித்தது சக்தி வாய்ந்த குண்டு என்பதால் அருகில் இருந்த கடைகள் மற்றும் 20 வாகனங்களிலும் தீ உடனடியாகக் பரவி யது. சம்பவத்தில் 60 பேர் இறந்தனர். சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இறந்தவர்கள் பெரும்பாலும் சிவிலியன் கள் ஒரு சில பொலிஸாரும் இறந்தவர்க ளில் அடங்குவார் முன்னதாக கிடைத்த செய்தி இச் சம்பவத்தில் 33 பேர் இறந்ததாக தெரிவித்தது.

இதனிடையே தென்கிழக்கு பாக்தாத்தில் நடைபெற்ற மற்றொரு குண்டுவெடிப்பு சம்ப வத்தில் மூவர் இறந்தனர்.

(க)

# பாலஸ்தீன பிரதமர் அலுவலகம் தகர்ப்பு

(ஜெருசலோம்)

இஸ்ரேல் -பாலஸ்தீனம் இடையே நீண்ட நாட்களாகவே போர் நடந்து வருகிறது. பாலஸ் தீனத்தில் ஹமாஸ் இயக்க தீவிரவாதிகள் ஆட் சிக்கு வந்ததில் இருந்து இந்த மோதல் மேலும் அதிகரித்து வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு இஸ்ரேல் இராணுவ வீரர் ஒருவரை பாலஸ்தீன தீவிர வாதிகள் கடத்திச்சென்றனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் இராணுவம் எச் சரிக்கை விடுத்தும் பாலஸ்தீன தீவிரவாதிகள் அவரை விடுதலை செய்யவில்லை.

இதைத்தொடர்ந்து பாலஸ்தீனத்தின் காஸா பகுதிக்குள் இஸ்ரேல் இராணுவம் புகுந்து தாக்குதல் நடத்தியது. ஏற்கனவே இஸ்ரேல் விமானங்கள் பாலஸ்தீன அதிபர் முகமது அப் பாஸ் கட்சியான பதாகட்சி அலுவலகம் மீது குண்டு வீசியது. இதில் அந்த கட்டடம் தீ பிடித் து எரிந்தது.

இந்ந நிலையில் நேற்று முன்தினம் பிர தமர் இஸ்மாயில் ஹனியா அலுவலகம் மீது இஸ்ரேல் சரமாரியாக ஏவுகணை தாக்கு தல் நடத்தியது. இதில் 2 ஏவுகணைகள் பிரதமர் அலுலவகத்தின் மீது விழுந்தது இதில் அந்த கட்டடம் இடிந்து தரை மட்டமானது.

இதில் பிரதமதரின் பாது காவலர்கள் 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

தாக்குதல் நடந்த நேரத்தில் பிரதமர் இஸ் மாயில் ஹனியா அங்கு இல்லை சற்று தாத மாக அவர் அங்கு வந்ததால் அவர் உயிர்தப் பினர் இது ப்றறி பிரதமர் இஸ்மாயில் கூறும் போது என்னை சிறை பிடிக்கவும் படுகொலை செய்யவும் இஸ்ரேல் இராணுவம் முயற்சி செய்து வருகிறது.

மீண்டும் பெரிய அளவில் போருக்கு அழைப்பதை தான் இஸ்ரேலின் இந்த செயல் காட்டுகிறது என்று கூறியுள்ளார். (க)

> ஒரு மனித ஜீவன் செய்யக்கூடிய முயற்சிகள் அனைத்திலும் மிகச்சிறந்தது, தனக்குத்தானே முற் றிலும் யோக்கியமாக இருப்பதுதான்.
>
> - ப்ராய்டு

## வலம்புரி

### நியாயமான தீர்வுத்திட்டத்தை சர்வதேச சமூகம் முன்வைக்க வேண்டும்

'வெறுங்கை முழம் அளக்காது' என்பது தமிழ்ப்பழமொழி. இந்தப் பழமொழி இலங்கை அரசுக்கு பெரிதும் பொருத்துடையதாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுத்திட்டம் எதுவுமின்றி பேச்சுவார்த்தை நடத்த அரசு முயலுகிறது. கடந்த காலங்களிலும் இதே நிலைமை இருந்ததன் காரணமாகவே இனப்பிரச்சினை பல ஆண்டுகள் கடந்தும் இன்னமும் நீடிக்கின்றது.

திம்புப்பேச்சுவார்த்தைகள் ,வட்ட மேசை மாநாடுகள்,சர்வகட்சி மாநாடுகள், பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள், இலங்கை-இந்திய ஒப்பந்தம் என பல்வேறு வழிகளில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு புறப்பட்டு எதுவுமே சரிவராது என்றாகிவிட்டது.

இறுதியாக நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுக்களும் முடியாது என்ற முடிபை எட்டிவிடுவதற்கான காலம் வந்துவிட்டது.

இவ்விதம் எந்த வகையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயன்றாலும் முடியாது என்பதற்கான காரணம் என்ன என்பதை சர்வதேச சமூகம் அறிந்து கொள்ள வேண்டும்.

முதலில் இலங்கையில் இருப்பது இனப்பிரச்சினை என்பதை ஏற்றுக்கொள்வதற்கே பல வருடங்களாயிற்று.முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்காவே இனப்பிரச்சினை இருப்பதை முதலில் ஏற்றுக்கொண்டவர்.

அதுவரை இலங்கையில் இருப்பது பயங்கரவாதமே என்ற பிரசாரமே உலகம் முழுவதிலும் பரப்பப்பட்டது. வெளிவிவகார அமைச்சராக இருந்த ஹமீத் முதல் காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர்காமர் வரை இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினையே இருக்கிறது என கூறிவந்தனர்.

உண்மை நிலை தெரிந்திருந்தும் அதனை மறைப்பதற்காக பொய்ப்பிரசாரங்களைச் செய்ததன் விளைவே இனப்பிரச்சினை இத்துணை தூரம் ஊதிப்பருத்துப் போவதற்கு காரணமாயிற்று.

எனவே இலங்கையில் இனப்பிரச்சினை தீர வேண்டுமாயின், இனப்பிரச்சினை தீரவேண்டுமென உலக நாடுகள் விரும்புமாயின் அதற்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு வழி இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளப்பட்ட உலக நாடுகள் தயாரித்துக் கொள்வதாகும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அவர்களின் மரபு வழித்தாயகம் ,அவர்களின் வாழ்வியல் உரிமை என்பவற்றை உள்ளடக்கிய தீர்வுத்திட்டத்தை சர்வதேச சமூகம் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

சுருங்கக்கூறின் விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை உள்ளடக்கிய தீர்வுத்திட்டமாக அது பரிணமிக்க வேண்டும். அதனை நடைமுறைப் படுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும். அதன் அமுலாக்கத்தில் இருந்து இம்மியும் விலகிக்கொள்ளாதவாறு இலங்கை அரசை கட்டுப்படுத்தும் பொறுப்பையும் சர்வதேச சமூகமே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்வதன் ஊடாகவே இலங்கையின் அரசால் எல்லை பிளவுபடாமல்; திரிவுபடாமல் தடுக்கவும் முடியும்.

இதனை விடுத்து இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை இலங்கை அரசே தயாரிக்க வேண்டுமென சர்வதேச சமூகம் இனிமேலும் கருதுமாயின் அதன் முடிபு இலங்கையில் மிகப் பெரும் யுத்தமாகவே இருக்கும்.

எனவே இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சர்வதேச சமூகத்தால் தயாரிக்கப் படுகின்றபோதே அது சாத்தியப்பாடானதாக அமைய முடியும்.

# விடுதலைப் போராட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும்! -தயாமோகன் அழைப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் அனைவரும் பங்காளிகளாக மாற வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களின்



விடுதலைப் போராட்டத்தினைச் சர்வதேச சமூகம் சரியான முறையில் உணர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என மட்டக்களப்பு மாவட்ட, அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித் தார்.

லெப் .கேணல் நிசாம் பயிற்சிப் பாசறையில் நான்காம் கட்ட கிராமிய படையணிப் பயிற்சி நிறைவு நிகழ்வு கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமுன்றலில் அண்மையில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

கிராமிய படையணிப் பயிற்சியானது இனிவரும் காலங்களில் மக்களின் அவசியப் பணியாக அமையப் போகின்றது. அடக்கு முறைக்குள் இருந்து விடுதலை பெறுவதற்கு அந்த நாட்டின் மக்களின் வலுவான எழுச்சிதான் விடுதலை பெறுவதற்கு உதவியது. அந்த வகையில் தமிழீழத் தேசியத் தலைவர் போராட்டத்தை ஆரம்பித்த காலத்தில் இருந்து தமது தனிப்பட்ட முயற்சியினால் இன்று வெற்றியின் விளிம்பைத் தொட்டு நிற்கின்றார். இந்த நிலையில் மக்கள் பார்வையாளர்களாக இருக்காது பங்காளிகளாக மாறவேண்டும் .

கிராமியப் படை எல்லைப்படைகளாக மக்கள் மாறிப் பயிற்சிகளைப் பெற்றுத் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு வலுவூட்டுகின்ற போது சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் போராட்டத்தினை உணர்ந்து கொள்ளமுடியும்.

பல நாடுகள் விடுதலைப்போரட்டத்தினைப் பயங்கரவாத முத்திரை குத்தித் தடை செய்த போது இந்தப் போராட்டத் தினைப் பலமாக நின்று வளர்த்தவர்கள் தமிழ் மக்கள் . எனவேதான் நாம் அனைவரும் ஒன்றிணைந்து வெற்றியைத் தொடர வேண்டியவர்களாக நிற்கின்றோம். நாளை எமது விடுதலைப் போராட்டத்தினை மாணவர்கள் கற்கின்றபோது இங்கு வாழ்ந்த மக்கள் வீரம் செறிந்தவர்கள், மண் வீரம் செறிந்தது என்ற வரலாற்றினைக் கற்க வேண் டும்.

அதற்காக இன்று வாழும் ஒவ்வொரு தமிழ் மகனும் இந்தப் போராட்டத்திற்குத் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டும். தாயினை எவன் நேசிக்கின்றானோ அவனே தாய் நாட்டிற்கும் பங்காளியாக்கின்றான் என்றார். (க)

# அரசாங்க ஊழியர்களின் உரிமையை வென்றெடுக்க அனைவரும் ஒன்றுபட்டு போராட முன்வரவேண்டும்!

## திருமலை தமிழ் மக்கள் பேரவை அழைப்பு

(திருகோணமலை)

தமிழ் இனத்தின் உயிர் உட்பட அனைத்தையும் பறித்து குழிதோண்டிப் புதைக்கும் இனவாத விரிப்பில் புதிய வியூகம் இன்னும் விரிவாக்கப்படுகின்றது. மனித உரிமை மட்டுமல்ல ஓர் இனத்தின் முழுமையான அழிப்புக்குமே முனைப்புடன் செயற்படும் பேரினவாத சக்திகளின் அட்டூழியத்தை அகிலமே இன்று கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளது என திரு மலை தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

சர்வதேச அழுத்தம் கழுத்து வரை இறுக்கிய நிலை யிலும் இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வை எடுப்பதற்கு முனையாது இன அழிப்பிலே மூச்சாக செயல்படும் இனவாத சக்திகளுக்கு இன்று ஜனாதிபதிராஜபக்ஷ தலைமைத்துவம் கொடுக்கின்றாரா? அல்லது இலங்கை மக்க ளின் சுபீட்ச வாழ்வுக்கு தலைவராக இருக்கின்றாரா என்பதே இன்று சர்வதேச அரங்கில் அனைத்து சக்திகளின் கேள்வியாகும்.

சமாதானத்தை அடைவதே தனது மஹிந்த சிந்தனை என்று மார்தட்டும் ஜனாதிபதி தனது தீர்வை முன்வைக்க திணறுவதும் திசை திருப்பிக்கொண்டிருப்பதும் சகலரும் புரிந்த நிலைதான். என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஹர்த்தால் காரணமாக வேலைக்குச் செல்லாத அரச ஊழியர் பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனித உரிமை மீறலும் மக்களை படுகொலை செய்வதும் இருப்பிடம் விட்டு ஓடி அல்லல்பட வைப்பதையும் கொடுமையின் உச்சநிலை கொள்வதையும் எதிர்த்து தமது நிலையை வெளிப்படுத்த எடுக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒன்றுபட்டு வெளிப்படுத்தும் போது மக்களின் மன உணர்வுகளை மக்களின் மனித உரிமைக்கான வெளிப்பாட்டுச்செயலை சற்றும் உணராது அவற்றை அடக்கி நசித்தளித்து வரும் படையினர் இடைவிடாது இன ஒடுக்கலை மேற்கொள்கின்றனர்.

கடந்த காலங்களிலும் மக்களின் ஜனநாயக எதிர்ப்பு வெளிப்பாட்டை அரசு சற்றும் உணராது அவற்றை அடக்குவதிலேயே முனைந்தது. இவ்வாறே 27.6.2006 ஆம் திகதி திருகோணமலை பொங்கு தமிழ் சமூகம் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு வேண்டுதலுக்கு மக்கள் தமது மன உணர்வை வெளிப்படுத்தி நீதிக்காக அதனை மேற்கொண்ட சகல அரச ஊழியர்களையும் தாமாகவே பதவிகளில் இருந்து நீக்கியவர்களாக கருதப்படுவார்கள் என்ற அறிவிப்பை செய்துள்ளனர்.

இதனால் இது அரச ஊழியர்களும் மக்களும் மன உடைந்து ஆவேசம் கொண்டுள்ளனர். இதேவேளை, சிங்கள சக்திகளின் ஹர்த்தால் பணிப்புறக்கணிப்பின் போது இவ்வாறு நடவடிக்கை எடுக்காத அரசும் உயர் அதிகாரி களும் தமிழ் மக்களின் ஜனநாயக போராட்டத்திற்கு எதிராக இந் நடவடிக்கை எடுப்பது ஏன்?

இதில் ஒன்று முக்கியமாகும். யாழ்ப்பாணத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத அரசு திருகோணமலையில் நடைமுறைப்படுத்தியது ஏன்? இன்று மூவின மக்களும் வாழும் திருகோணமலையில் மக்கள் போராட்டத்தை மூவின மக்களும் மானசிகமாக ஏற்று உத்தியோகத்தர் , ஊழியர், தொழிலாளர் என்று ஒன்றுபட்டு இருக்கும் நிலை வெளிப்படையானது. இந் நடவடிக்கையால் இன்று மூவின மக்களும் வேலையிழந்துள்ளனர். இதில் இருந்து ஒன்று புலப்படுகின்றது.

தமது ஆட்சி நிலைப்புக்கு ஆளும் வர்க்க பிளைப்புக்கு இனவாதத்தை மூலதனமாக்கும் அரசு தமது நலன் முக்கியத்துவப்படும் பொழுது இன, மொழி என பாகுபாடு பார்க்காதது என்பதும் வெளிப்படையாகின்றது. இது இன ரீதியான ஒடுக் கலும் அழிப்பும் இருக்கும் தான் என்பது உண்மை.

அரசு தமது ஆளுமை நிலைக்கு சகல இனங்களையும் ஒடுக்கும் அடக்கம் என்ற அதன் உண்மை வடிவத்தையும் வெளிப்படுத்துகின்றதல்லவா? ஆகவே அரச ஊழியர்களே மக்களே அரசின் மக்கள் விரோத இச்செயலுக்கு எதிராக சகல அரச ஊழியர்களின் உரிமைக்கு ஆதரவாக மக்களும் அரச ஊழியர்களும் தொடரான போராட்டத்தில் நீதிக்கு சார்பாக அரச ஊழியரின் உரிமையை வென்றொடுக்க அனைவரும் ஒன்று பட்டு போராட முன்வரவேண்டும் என சகலரையும் அழைக்கின்றோம். (க)

# கொழும்பு வாசிகளின் விபரங்கள் கணனிமயம்

(கொழும்பு)

கொழும்பு 1 முதல் கொழும்பு 15 வரையான பகுதிகளில் வசிக்கும் அனைவரின் விபரங்களும் கணனி மயப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர் னாண்டோ தெரிவித்துள்ளார்.

கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி அலுவலர் என்போரூடாகத் திரட்டப்படும் இவ்விபரங்கள் பொலிஸ் தலைமையகத்தில் கணனி மயப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படும் என அவர் மேலும் தெரி வித்தார்.

கொழும்பில் உள்ள அனைத்துக் பொலிஸ் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு இவ் விபரங்களை பரிமாற்றம் செய்யப்படவுள்ளன. பொதுவாக கொழும்பு வாசிகள் எனக் குறிப்பிடப்பட்டாலும் தமிழர் விபரங்களே இவ்வாறு கணனி மயப்படுத்தப்படவிருப்பதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லையாம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு கடற்பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் படகு பழுதான நிலையில் கரைக்கு வந்தபோது கைது செய்யப்பட்டதாக கூறப்படும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் தகவல்களையடுத்தே இந்த தேடுதல் நடத்திய பொலிஸார் தெரிவித் தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான சிறிய ஆயுதக்கப்பல் ஒன்று கடலில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது.

இதன் போது கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (க-9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



ஓர் இலட்சியத்தை ஏற்படுத்திக்கொண்டு இந்த வினாடியிலிருந்தே அதை அடையும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுங்கள் உங்களுடைய உழைப்பில் நீங்கள் முழு மையாக இருந் தால வெற்றி பெறுவதிலிருந்து உங் களை யாரா லும் தடுத்து நிறுத்த முடியாது.

# மத்திய வங்கி ஆளுநர் நியமனம் விசாரணை நடத்தக் கோரிக்கை

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் கப்ரால் நியமிக்கப்பட்டமை மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் சுனில் மெண்டிஸ் பதவி விலகியமை தொடர்பாக ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்க ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்றத்திற்கு யோசனையை முன்வைத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்த்தன , பீ.தயாரத்ன ,ரஞ்சித் அளுவிகார,தயாசிறி ஜெயசேகர, டபிள்யூ.பி. எக்கநாயக்க ,லக்ஷ்மன் செனிவிரத்ன,யோண்ஸ்டன் பெர்ணான்டோ,தர்மதாச பண்டார,நியோமல் பெரேரா ஆகிய உறுப்பினர்களினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாண சபை உறுப்பினராக அஜித் கப்ரால் இருந்துள்ளதாகவும் பொதுத்தேர்தலின்போது கொழும்பு மாவட்டத்திற்கு போட்டியிட்டுள்ளார் என்றும் அரசியல் கட்சியின் அமைப்பாளராக இருந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர் பிரமீட திட்டம் என்றழைக்கப்படும் சட்டத்திற்குட்படாத பணக்கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருந்தார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (ச-5)

# பொலிஸ் அதிகாரியின் வாசஸ்தலம் இலஞ்ச ஊழல் ஆ.குழுவால் சோதனை

(கொழும்பு)

வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் உத்தியோக பூர்வவாசஸ்தலம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசேட குழுவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி பொதுமக்களிடம் இருந்து அநாவசியமாக நிதி வசூலிப்பதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து அவ் வீட்டை சோதனைக்குட்படுத்தியதாக ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியின் வீடு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 7 மணி முதல் விசேட குழுவொன்றினால் சோதனைக்குட்படுத்தப்பட்டது. எனினும் இலஞ்சம் அல்லது அநாவசியமாகப்பணம் வசூலித்தமைக்கான தடயங்கள் எதனையும் கைப்பற்ற வில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-7)

# கிரனைட் தாக்குதலையடுத்து மக்கள் மீது இராணுவம் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சந்தியில் உள்ள இராணுவக்காவலரண் மீது நேற்று மாலை கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கித்தாக்குதல் மற்றும் தடியடிப்பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் கொக்குவில் சந்தியில் உள்ள இராணுவக் காவலரண் மீது மோட்டார் சைக்கிளில் வந்த சிலரால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் சோமசுந்தரம் உருத்திராசா (வயது 63) என்பவர் காயமடைந்தார்.

இச் சம்பவம் இடம் பெற்றவேளை அப்பகுதியில் சென்றவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதாக தெரியவருகிறது.

இதன்போது சாரதியான கண்ணதாசன் (வயது 26) என்பவர் காயமடைந்தார். காயமடைந்த இருவரும் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ச-5)

# புனர்வாழ்வுக்கழக பணியாளர் துணைக்குழுவினரால் கடத்தல்

மட்டக்களப்பு வாழைச்சேனையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளரான கிருஷ்ணபிள்ளை கமலநாதனை துணை இராணுவக்குழுவினர் கடத்தியுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வாகரை பிரதேசத்தில் சிறார் பாதுகாப்பு பிரிவில் கிருஷ்ணபிள்ளை பணியாற்றி வந்தார்.

வாழைச்சேனையில் மோட்டார் சைக்கிளில் அவர் சென்று கொண்டிருந்தபோது இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவான கருணா குழுவினரால் நேற்று காலை 10.30 மணியளவில் அவர் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு இது குறித்து தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (ச-5)

# 42 பேர் கைது

காலி அக்ரோஸ்ஸ பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த வேளையில் கைதுசெய்யப்பட்ட 38 தமிழ் இளைஞர்கள் உட்பட 42 பேர் கொழும்பு பயங்கரவாதத்தடுப்புப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த 42 பேரையும் தடுப்புக்காவலில் வைக்க உத்தரவு பெற்று கொழும்புக்கு அனுப்பிவைத்துள்ளதாக வெலிகம உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ச-9)

# இரத்த வங்கி திறந்து வைக்கப்பட்டது

(கற்கோவளம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எம்.டி.எம்.போர்த்துக்கல் நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்ட இரத்த வங்கி கடந்த முதலாம் திகதி காலை 9 மணியளவில் மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை தலைமையில் மாகாண சுகாதாரப் பிரதிப்பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் எம்.டி.எம்.போர்த்துக்கல் நிறுவன அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ச-104)

# முத்தலிப்பின் கொலை தொடர்பில் புலிகளுக்கு 13 இலட்சம் செலவு

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

இராணுவத்தின் புலனாய்வுத்துறை அதிகாரியான முத்தலிப்பை கொலை செய்வது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொடுப்பதற்கு 13 இலட்சம் ரூபாவை விடுதலைப் புலிகள் செலவழித்துள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் தமக்குத் தேவையானவாறு இலக்குகளைத் தேர்ந்தெடுத்து பார்ப்பதற்கு தென்னிலங்கை மக்களை விலைக்கு வாங்குகின்றனர் விடுதலைப்புலிகள்.

முத்தலிப் கொலை தொடர்பில் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையினருடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

கொழும்பு துறை முகம் மீதான தாக்குதல் முயற்சியிலும் விடுதலைப்புலிகள் நீர்கொழும்பில் உள்ள மீனவர்களுக்கு பெருந்தொகையான பணத்தைக்கொடுத்து அப் பிரதேசத்தில் பாதுகாப்பான வீடு ஒன்றைப் பெற்றுக்கொண்டதாகவும் தமக்குத் தேவையான வெடிபொருட்களை அந்த வீட்டுக்குக் கொண்டு வந்து அங்கிருந்து தாக்குதல் திட்டங்களை வகுத்ததாகவும் நிக்சன் என்ற தாக்குதல் பொறுப்பாளரை அங்கிருந்து வன்னியில் உள்ள கடற்புலிகளின் தளபதியுடன் தொடர்புகளைப் பேணியதாகவும் தெரியவந்துள்ளது என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கடந்த வாரம் திருகோணமலையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் உறுப்பினர் மூலம் பல தகவுல்கள் வெளிவந்துள்ளன.

இராணுவக்கப்டன் ஒருவரிடம் இருந்தும் தொடண்டர் படைச்சிப்பாய் ஒருவரிடம் இருந்தும் பல பெறுமதியான தகவல்களை தொடர்ச்சியாகப் பெற்றுவந்ததாக அந்த புலி உறுப்பினர் விசாரணைகளின்போது கூறியுள்ளார் என மேலும் தெரியவருகிறது. (ச-5)

# சிங்கள இளம்...

தொடர்புகள் அவற்றின் நடவடிக்கைகள் பற்றியும் தனது பத்திகளில் எழுதி வந்தார்.

இவர் வீடு திரும்பாததால் தேடிச்சென்றபோது நேற்றுக் காலை தெகிவளை விஜயா வீதியில் சுடப்பட்டு சடலமாக கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது கட்டுரைகள் இருதின ,லக்பிம , சத்தின ,ஆகியவற்றில் வெளிவந்திருந்தன. இவற்றை விட ரி.என்.எல். தொலைக்காட்சிக்கும் இவர் பணியாற்றியுள்ளார். (ச-5)

# வடமராட்சி...

துருவித்துருவிச் சோதனைகளை மேற்கொண்டனர். இதில் பொலிஸாரும்பெண் இராணுவத்தினரும் இராணுவத் தினருடன் இணைந்து ஈடுபட்டனர். (ச-5)

# ஆயர் தின விழா

(இருபாலை)

யாழ்.மறைக்கல்வி நடுநிலையமும் , யாழ்.கத்தோலிக்க ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் ஆயர் தின விழாத்திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு மாணவர்கள்,ஆசிரியர்கள்,அதிபர்கள் காலை 8.30 மணிக்கு பேராலயத்திற்கு சமுகமளிக்க வேண்டப்படுகின்றனர். (ச-136)

# இலங்கைக் கடற்படைக்கென நவீனரக ஆயுதங்கள் கொள்வனவு

## அமெரிக்கா, இஸ்ரேலிடம் முன்மொழிவு

(கொழும்பு)

இலங்கை கடற்படைக்கு புதிதாக மேலும் பல கனரக பீரங்கிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அமெரிக்கா, இலங்கை கடற்படைக்குரிய புஷ் மாஸ்ரர் 44 ரக பீரங்கிகளை வழங்க முன்வந்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு செயலர் கோட்டபாய ராஜபக்ஷ அமெரிக்க கடற்படையினருடன் அண்மையில் கலந்துரையாடியுள்ளார்.

பீரங்கிக்கொள்வனவிற்காக அவர் இஸ்ரேலுக்கும் செல்லவுள்ளார். இஸ்ரேலின் பீரங்கி ஒன்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

அமெரிக்கா பீரங்கித்தொகுதி ஒன்றை 2 இலட்சத்து 45 ஆயிரத்து 275 டொலர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.

இஸ்ரேலியப் பீரங்கியின் விலை 3 இலட்சத்து 37 ஆயிரம் டொலர்களாகும். இஸ்ரேலியத்தயாரிப்பு டோறாப் படகுகளில் தற்போதுள்ள 23 மில்லி மீற்றர் பீரங்கிகளுக்குப் பதிலாக புதிய 30 மில்லி மீற்றர் பீரங்கிகள் பொருத்தப்படவுள்ளன.

15 டோறாப்படகுகளில் இவை பொருத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. கடற்படையின் காங்கேசன்துறை, திருகோணமலை படகணாங்கள் நெருக்கடிக்குள்ளாகியிருப்பதால் இந்த பீரங்கிகள் கொள்வனவை இலங்கை அரசு துரிதப்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (க)

# நாட்டில் வன்முறைகள் ஏற்படுவதற்கு...

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் உத்தியோக பூர்வமற்ற உக்கிரமற்ற போருக்கு மகிந்த ராஜபக்ஷ்வின் கடும்போக்கே காரணமாகும்.

அவரை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தால் இராணுவத்தினரை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும்படியும்,அவை புரியும் படுகொலைகளை நிறுத்த ஆக்கபூர்வமான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவரிடம் வலியுறுத்துவேன் என்றார்.

ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதன் மூலம் அமைதிப்பேச்சுக்களுக்கு ஏற்ற புறச்சூழ்நிலையை ஏற்படுத்தும்படியே நாம் மகிந்த ராஜபக்ஷவை வலியுறுத்துகிறோம் என்று கூறியுள்ளார்.

அண்மையில் ஹெறப்பிட்டிக் கொல்லாவவில் இடம்பெற்ற பேருந்து மீதான தாக்குதல் சம்பவம் பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், அந்தச் சம்பவத்திற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் எவ்விதத் தொடர்புமில்லை.

பல ஆயுதக்குழுக்கள் இயங்குகின்றன. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அந்த ஆயுதக்குழுக்களே மேற்கொண்டுள்ளன.

இதனை விடுதலைப்புலிகள் சம்பவம் இடம்பெற்ற உடனேயே சுட்டிக்காட்டியிருந்தனர். அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் போய் நாங்கள் வெடிகுண்டுகளை பொருத்தி வெடிக்க வைக்க முடியாது. ஆனால் கடந்த காலச்சம்பவங்களைக் கருத்தில் கொண்டு தற்போது இடம்பெறும் சம்பவங்களில் நாம் வெளியிடும் கருத்துக்களையோ கண்டனங்களையோ எவரும் தீவிரமாக எடுக்க வில்லை.

எங்காவது படுகொலைகளோ அல்லது வன்முறைகளோ இடம் பெற்றால் அதற்கு நாம்தான் காரணம் என்று குற்றஞ்சாட்டி விடுகிறார்கள் என்றார் அன்ரன்பாலசிங்கம். (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.